கோகுலம்

GOKULAM

ஏப்ரல் 2001 ரூ.6/-




பூமியைக் காப்போம்; பூமி நம்மைக் காக்கும்!

தவறுகளைக் கண்டுபிடியுங்கள்!



விடை : 1. கடம் வித்வான் குடத்தை வைத்திருக்கிறார் 2. வயலின் தவறாகப் பிடிக்கப்பட்டிருக்கிறது. 3. மைக் கவிழ்ந்துள்ளது.

ஒரே மாதிரியானவை எவை?



விடை : 1, 5

பிருந்தாவனம்






"5 நிமிஷத்துக்கு எத்தனை நொடிடா?"

"படிக்கும் போதா, விளையாடும் போதா சார்?"

- சீர்காழி வே.ரேவதி.

வரைந்து பழகுங்கள்!



"உங்க மாமாவுக்கு விபத்துல அடியாமே, எந்த இடத்துலே?"

"தண்டுவடத்துல!"

"இந்த ஊர்ல அப்படி ஒரு இடம் இருக்கா?"

- மு. நியாஸ் அகமது, தஞ்சாவூர்.



* சச்சின் போஸ்டர்
பக்கம் - 40




* நண்டு
பக்கம் - 8

❐ புலியைப் பார்த்து முயல் பயப்படலாம். ஆனால் முயலைப் பார்த்துப் புலி பயப்படுகிறது, ஏன்?

பக்கம் - 12

❐ 1550 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வெளியான அனைத்துப் புத்தகங்களும் இந்த நூல் நிலையத்தில் உள்ளன.

பக்கம் - 6



* புவி பாதுகாப்பு   பக்கம் - 72


❐ "ஆத்தா வந்துட்டா! மாரியாத்தா மகமாயி நல்ல அருள் கொடுத்துக் காப்பாத்து" என்று ஒரு பெண் ஆடத் தொடங்கினாள்.

பக்கம் - 28


❐ எல்லோரும் கோடீஸ்வரனாக விரும்புகிறார்கள். ஒரு கிராமத்துப் பாட்டி ஒரு கோடியை வாங்கியிருக்கிறார்.


பக்கம் - 42

* விஷம விச்சு!
பக்கம் - 16



* புதிய தொடர்கதை
பக்கம் - 44





கோகுலம்

மலர் : 19   இதழ் : 3   ஏப்ரல் 2001

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.   - பாரதியார்.

பெண் பார்க்க

“காட்டு ராஜாகிட்டேயே உன்னோட வேலையைக் காட்டுறியா? ஒரு அடி எடுத்து வைத்தால்கூட உன்னைக் கடித்துக் குதறி விடுவேன்...'' என்று கோபக்கனல் பொங்க சிங்கம் கர்ஜித்தது.

“ஐயோ, காட்டு ராஜாவே! கையெடுத்துக் கும்பிடுறேன். நான் பரம்பரை ஏழை. ஏதோ என் வயிற்றுப் பிழைப்புக்காக விறகு வெட்டி, என் மனைவி, மகளைக் காப்பாற்றி வரேன். என்னைக் கொன்று விடாதே” என்று பயந்து நடுங்கியபடி பதிலளித்தான் விறகு வெட்டி கந்தன்.

''உனக்குப் பொண்ணு இருக்கா?'' – சிங்கம்.

“ஆமாம். எனக்குக் கல்யாண வயசுலே ஒரு பொண்ணு இருக்குதுங்க... அதுக்கு ஒரு கல்யாணம் செய்கிற வரைக்காவதும் நான் உயிருடன் இருக்க வேண்டும் ராஜாவே...!”

“நல்ல யோசனை ஒண்ணு சொல்றேன். செய்றியா?'' என்றது சிங்கம்.

“தாராளமாகச் சொல்லு, செய்கிறேன்'' என்றான் கந்தன்.

''மறுக்க மாட்டாயே?'' கேட்டது சிங்கம்.

''மறுக்க மாட்டேன்'' பதில் தந்தான் கந்தன்.

“சரி, உன்னோட மகளை எனக்குக் கல்யாணம் செய்து வை. அப்படி செய்வதாகச் சத்தியம் செய்தால்தான் நான் உன்னை உயிரோடு விடுவேன். என்ன சொல்றே?” சிங்கம் கடுமையாகக் கேட்டது.

இதைக் கேட்டதும் தலையில் இடி விழுந்தது போலாகி விட்டது கந்தனுக்கு. இதற்கு என்ன பதில் சொல்வது? மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவியாய்த் தவித்தான் கந்தன்.

‘கண்ணை இமை காப்பதுபோல் இத்தனை நாளாக என் பெண்ணைக் காப்பாற்றி விட்டு, ஒரு காட்டு மிருகத்துக்கா கல்யாணம் செய்வது?’ என்று சிலை போல் நின்று சிந்தனையில் மூழ்கினான்.

“ஏன் ஒரு பதிலும் பேசாமல் நிற்கிறாய்?” அதட்டியது சிங்கம். எப்படியும் சிங்கத்திடமிருந்து தப்பிக்க வேண்டுமே. அதற்கு என்ன செய்வது. சமயோசிதமாக ஏதேனும் ஒரு பதிலைச் சொல்லி, பெரிய ஆபத்திலிருந்து தப்பித்து விடலாம். பிறகு நடப்பது நடக்கட்டும் என்று மன உறுதியோடு கந்தன் ஒரு முடிவுக்கு



வந்த சிங்கம்!

வந்தான்.

"உன் யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த விஷயத்தை நான் வீட்டிற்குப் போய் என் மனைவியிடமும், மகளிடமும் சொல்லி எப்படியாவது உங்க கல்யாணம் நடப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறேன். இது உறுதி. என்னை நம்பு" என்று சிங்கத்தின் சீற்றம் தணியும்படி பதில் தந்தான் கந்தன்.

சிங்கத்திக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. "சரி, பெரியவரே! உங்களால் எனக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது-அதனால் நான் உங்களைக் கொல்லாமல் வீட்டுக்கு அனுப்புகிறேன். வருகிற திங்கட்கிழமை பெண் பார்க்க நான் வருவேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று கூறிவிட்டு குதூகலத்தோடு சிங்கம் தன் குகைக்குச் சென்றது.



கந்தன் வீடு வந்து சேர்ந்தான். பல வருடங்களாக அவன் விறகு வெட்ட காட்டுக்குச் செல்வது வழக்கம். இதுவரை அவன் எந்த ஆபத்திலும் மாட்டிக் கொண்டதில்லை.

தன் மனைவியிடமும் மகளிடமும் காட்டில் நடந்த சம்பவத்தைச் சொல்லி கந்தன் கண்ணீர் விட்டான். அவனுடைய மகள் பார்த்தாள். நம்மால்தானே அம்மாவும் அப்பாவும் இப்படி கவலைப்படுகிறார்கள். இந்த ஆபத்தில் இருந்து தப்பிக்க எப்படியாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைத்தாள். அவள் பெற்றோருக்கு தைரியமூட்டினாள்.

"நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்" என்றாள் மகள்.

"என்ன சொன்னே... கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறாயா...! எப்படியம்மா உனக்கு இந்தத் தைரியம் வந்தது. என் இதயமே வெடித்து விடும் போலிருக்கே... நான் என்ன செய்வேன்...?" என்று கந்தன் புலம்பினான்.

"அப்பா பயப்படாமல் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தச் சிங்கத்திற்குச் சரியான பாடத்தை நாம் கற்பிக்க வேண்டும். எப்படியாவது தந்திரம் செய்து சிங்கத்திடமிருந்து நாம் தப்பித்து விடலாம். கவலைப் படாதீர்கள்" என்றாள் மகள்.

"தந்திரமா...? என்ன தந்திரம்...?

"அப்பா, சிங்கம் வரட்டும். அப்பொழுது நான் சொல்லியபடி தந்திரமாய் அதை ஏமாற்றிவிடலாம். நீங்கள் நான்கைந்து ஆட்களைப் பெரிய தடியுடன் நம் வீட்டிற்கு வரும்படி செய்து விடுங்கள். பிறகு நடப்பதைப் பாருங்கள்"

துரை முருகேசன்



என்று சிரித்தாள் அறிவுள்ள மகள்.

திங்கட்கிழமை வந்தது.

எந்த நேரத்தில் சிங்கம் வருமோ என்று கந்தன் வீட்டில் எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்... நடுங்கியபடி....!

"க...ர்...ர்...ர்" சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. எதிர்பார்த்தபடியே சிங்கம் வந்து விட்டது. அதைக் கண்டதும் எல்லாரும் பயந்து அங்குமிங்கும் ஓடினார்கள்.

"பயப்படாதீர்கள். நான் உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன். எல்லாரும் தைரியமாய் வந்து உட்காருங்கள்" என்றது சிங்கம்.

எல்லாரும் வந்து உட்கார்ந்தார்கள்.

கந்தன் குடும்பத்தினர் சிங்கத்தை ரொம்ப மரியாதையுடன் வரவேற்றார்கள்.

சிங்கத்துக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சிங்கம் தன்நிலை மறந்தது.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்க உங்க மகள் சம்மதிக்கிறாளா...?" கேட்டது சிங்கம்.

"உம்... சம்மதிக்கிறாள்... ஆ...னா...ல்!" - கந்தன்.

"ஆனால்... என்ன?" - சிங்கம்.

"அப்பா இங்கே வாங்களேன்" என்று உள்ளிருந்தபடி மகள் கூப்பிட்டாள்.

சிறிது நேரத்தில் கந்தன் திரும்பி வந்தான்.

"காட்டு ராஜாவே.. என் மகள் உங்களைக் கல்யாணம் செய்ய ரொம்பப் பயப்படுகிறாள்.."

"என்ன பயம்?"

"கூர்மையான உங்கள் பற்களைப் பார்த்துப்பயப்படுகிறாள். மேலே பட்டுவிட்டால் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமே..."

"ப்பூ... இவ்வளவுதானா... இதோ ஒரு நொடியில் ஓடிப் போய் என் பற்களை எல்லாம் பிடுங்கி எறிந்து விட்டு வந்து விடுகிறேன்" என்று சிங்கம் வெளியே ஓடியது.

முதல் தந்திரம் பலித்தது என்று கந்தனும் அவன் மகளும் ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள்.

"இதோ எல்லாப் பற்களையும் பிடுங்கி எறிந்து விட்டேன். இப்போ சம்மதமா?" என்று கேட்டுக் கொண்டே சிங்கம் உள்ளே வந்து உட்கார்ந்தது.

"காட்டு ராஜாவே...! என் மகள் மறுபடியும் பயந்து சாகிறாள். நான் என்ன செய்யட்டும்?" - கந்தன்.

"மறுபடியும் என்ன பயம்? நீங்கள் சொன்னபடி எல்லாப் பற்களையும் பிடுங்கி விட்டேனே!" என்றது சிங்கம்.

"பற்களைப் பற்றி இனி பயமில்லை. உங்களுடைய நான்கு கால்களிலும் கூர்மையான நகங்கள் கத்தி போல் நீட்டிக் கொண்டிருக்கிறதே...! அதைக் கண்டுதான் என் மகள் பயப்படுகிறாள்..."

"ஓ...ஹோ! அப்படியா! இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சிங்கம் வெளியே ஓடியது.

இரண்டாவது தந்திரமும் பலித்துவிட்டது. இனி நாம் சிங்கத்தை ஒரு கை பார்த்து விடலாம் என்று எல்லாரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இதோ சொன்னபடி நகத்தை எல்லாம் பிடுங்கி எறிந்து விட்டேன். இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்!"


"என்ன சொல்வது மறுபடியும் என் மகள் பயப்படுகிறாளே" என்றான் கந்தன்.

"என்னய்யா பயம்?" கோபத்துடன் கேட்டது சிங்கம்.

"உங்களுக்குப் பல்லும் இல்லை. நகமும் இல்லை. ஏதேனும் மிருகத்தால் ஆபத்து வந்தால் உங்களால் உங்களுடைய எதிரியை ஒன்றும் செய்ய முடியாதே. இதை நினைத்துத்தான் என் மகள் பயப்படுகிறாள்."

"யோவ், என்னய்யா சொல்றீங்க... எல்லாரும் சேர்ந்து என்னை ஏமாற்றுகிறீர்களா?" என்று கோபத்தோடு சிங்கம் கூடியிருந்தவர்கள் மேல் பாய்ந்தது.

முன்னெச்சரிக்கையாக அவர்கள் வைத்திருந்த பெரிய தடிகளால் சிங்கத்தை மாறி மாறி அடித்தார்கள். சிங்கம் பயந்து காட்டை நோக்கி ஓடியது. திரும்பி வரவேயில்லை!



"நீங்க விளையாடின கிரிக்கெட் பந்து எங்க வீட்டுக்குள்ளே வரலையே!"
"மாடி ஜன்னல் கண்ணாடி உடைந்ததே. சத்தம் உங்களுக்குக் கேட்கலையா?"
- கு. அருணாசலம்
"பல் வலி டாக்டர்..."
"கடைவாய்ப் பல்லா, நடுப் பல்லா?"
"ம்ஹூம். பல வலி டாக்டர், தலை வலி, இடுப்பு வலி, முதுகு வலி...!"
- சாயம் வெ. ராஜாராமன்
''பத்திரிகைல ஜோக்கைப் படிச்சிட்டு விழுந்து விழுந்து சிரிக்கறீங்களே, யார் எழுதின ஜோக்?"
''நான்தான். வேற யாரும் சிரிக்க மாட்டேங்கறாங்களே!"
- பாலகிருஷ்ணன், சென்னை
"உங்க தாத்தாவோட பல் எப்படி?"
"கங்குலி மாதிரியா... நல்லா ஆடுதே!"
- ஏ. குமார், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சத்ய சாய் ஸ்ரீநிவாசா மேல்நிலைப் பள்ளி, திருப்பதி.
"தமிழ்ப் பாடநூல் ஐந்தாம் வகுப்பு விலை இருபத்திரண்டு ரூபாய்ன்னு சொல்லிக்கிட்டிருக்கியே? ஏன்?"
"எங்க வாத்தியார் தான் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் முதல் பக்கத்தை மனப்பாடம் செய்துக்கிட்டு வரச் சொல்லியிருக்கார்!"
- பி. கவிதா, உடுமலை.
ஜோரா சிரிங்க!

இன்று உலகிலேயே பெரிய நூலகம் என்று சொல்லக் கூடியது ரஷ்யாவில் உள்ள 'லெனின் நூலகம்' ஆகும். புதிய ரஷ்யாவை அமைக்க மாபெரும் உதவி செய்தமையால் அந்த நன்றியை வெளி உலகுக்குக் காட்டும் பொருட்டு லெனின், இறந்த மூன்றாம் நாளில் அவர் பெயர் அந்த நூலகத்திற்குச் சூட்டப்பட்டது.

இது லெனின் நூல் நிலையம் என்று பெயர் மாறுவதற்கு முன்பு 'ரும்யாந்த் செவ் பொது நூலகம்' என்ற பெயரில் இயங்கி வந்தது. அந்தப் பெயரில் அது இயங்கிய போது அதில் அமர்ந்து படித்தவர்களின் எண்ணிக்கை இருபது பேர்தான்.

ஆம் - அவ்வளவுதான் அதன் வசதியே. ஆனால் தற்போது - நிம்மதியாக அமர்ந்து அறிவைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு இருபத்து இரண்டு கூடங்கள் உள்ளன.

ஒவ்வொரு கூடத்திலும் இரண்டாயிரத்து ஐநூறு பேர் அமரலாம். இதைத் தவிர வாசகர் மாநாடு அடிக்கடி நூல் நிலையம் சார்பாக நடைபெறுவதால் அவர்கள் வசதியின் பொருட்டு ஐநூறு பேர் அமரக்கூடிய பொதுமண்டபம் ஒன்றும் உள்ளது.

இது ரும்யாந்த் செவ் நூல் நிலையம் என்ற பெயரில் இருந்தபோது வருகை தரும் முக்கிய வாசகர்கள் - லெனின், டால்ஸ்டாய் போன்றவர்கள். ஆனால் இப்போது புகழ் பெற்றவர்களின் பட்டியல் விவரித்துச் சொல்ல முடியாதபடி நீண்டுகொண்டே போகிறது.


இந்த நூல் நிலையத்தில் கி.பி. 1550 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை வெளியான நூல்கள் உள்ளன.

ரஷ்ய மொழி பெயர்ப்பில் வெளியான 89 வேற்று மொழி நூல்கள் இதில் உள்ளன. 109 வெளிநாட்டு மொழிகளில் வெளியான நூல்களும் இதில் இருக்கின்றன.

இங்கே உள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை இரண்டு கோடியே ஐம்பது லட்சம் நூல்களாகும்.

இந்த நூல்கள் அடுக்கி வைத்திருக்கும் அலமாரிகளின் மொத்த நீளத்தைச் சொல்வதானால் 450 கிலோ மீட்டரைத் தாண்டி விட்டது.

விளக்கமாகச் சொல்வதென்றால் சென்னையில் இருந்து மதுரை வரை எவ்வளவு தூரம் இருக்குமோ அவ்வளவு தூரம் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!







லெனின் நூலகம்!



• லெனின்

ஒவ்வொரு வருடமும் புதிதாக வெளிவரும் பத்து லட்ச நூல்களும் பத்திரிகைகளும் இந்நூல் நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் புதிய வரவுகளை அடுக்குவதற்காகப் பதினான்கு கிலோமீட்டர் நீளமுள்ள அலமாரிகள் புதிது புதிதாகச் செய்யப்படுகின்றன. ஏட்டுச் சுவடிகளும் சேகரிக்கப்படுகின்றன.

இந்த நூல் நிலையத்தில் தினசரி வரும் வாசகர்களின் எண்ணிக்கை பத்தாயிரம்.

1968 ஆம் ஆண்டு மட்டும இந்த நூல் நிலையத்திற்கு வருகை தந்திருப்போர் எண்ணிக்கை இருபத்து ஐந்து லட்சம் பேர் என்று ஆதாரபூர்வமான குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

அவர்கள் எடுத்துப் படித்த நூல்களின் எண்ணிக்கை ஒரு கோடியே இருபது லட்சம் நூல்கள்!

இந்த நூல் நிலையம் புத்தகம் படிக்கும் வாசகர்களுக்கும் புத்தகங்களை எழுதும் எழுத்தாளர்களுக்கும் இனிய தொடர்பை ஏற்படுத்தித் தருகிறது.

மாஸ்கோவில் இந்த நூல் நிலையம் இன்றும் இயங்கி வருகிறது. வாசகர்கள் தாம் தேர்ந்தெடுக்க வேண்டிய புத்தகத் துறையை அடைய ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் காரில்தான் செல்ல வேண்டும்.

இவ்வளவு பெரிய நூல் நிலையத்திற்கு இருக்கும் வாசல்களுக்கும் ஜன்னல்களுக்கும் கணக்கே கிடையாது!

– ஆர்.ஆர். பூபதி



குளக்கரை, ஆற்றங்கரை, கடற்கரை, வயல்வெளிகளில் சாதாரணமாக எல்லோரும் நண்டுகளைப் பார்த்திருக்கலாம். நண்டுகளின் அருகில் நாம் சென்றதும் குடுகுடுவென வேகமாக ஓடி வளைக்குள் ஒளிந்து கொள்ளும் காட்சி நம் மனதைக் கொள்ளை கொள்ளும்.

கணுக்காலி பிராணி தொகுப்பிலே ஓட்டு மீன் இனத்தைச் சேர்ந்தது நண்டு. இவற்றின் மேல் கடினமான ஓடு காணப்படும். நண்டின் ஓட்டுக்குள் இருக்கும் சதைப் பகுதி மிகவும் மென்மையானது. எனவேதான் இயற்கை கடினமான மேலோட்டை அதற்குப் பாதுகாப்பு அரணாக வைத்திருக்கிறது. ஓடு சுண்ணாம்புப் பொருளாலானது.


தலையும் மார்பும் ஒன்றாக இணைந்து மேல் ஓட்டினால் மூடப்பட்டிருக்கும். உடலின் பின் பகுதியாக இருப்பது வயிறு. இது கீழ்நோக்கி மார்பின் அடிப்பாகத்தி

நீரைச் சுத்தப்படுத்து











நண்டு!

எஸ். சுஜாதா

லுள்ள பள்ளத்தில் அழுந்தி யிருக்கும். ஆண் நண்டின் வயிற்றுப் பாகம் குறுகலாகவும், பெண் நண்டின் வயிற்றுப் பாகம் அகன்று வட்டமாகவும் இருக்கும். பெண் நண்டு வயிற்றில்தான் முட்டைகளைச் சுமக்கும்.

நண்டுக்கு ஐந்து ஜோடி கால்கள் உள்ளன. முதல் ஜோடி பெரியது. ரொம்ப வலிமையாகவும் நுனியில் இடுக்கிப் போன்றும் காணப்படும். இந்தக் கால்களின் உதவியால் தான் நண்டு இரையைக் கத்தரித்து, நசுக்கி உண்ணுகிறது. மற்ற நான்கு ஜோடி கால்கள் நடப்பதற்கு உதவுகின் றன. நீரில் நீந்தி வாழும் நண்டுகளுக்குப் பின்னங்கால்கள் துடுப்புப் போலத் தட் டையாக இருக்கும். இவை எப்பொழுதும் பக்கவாட்டிலேயே நடக்கின்றன.

இவற்றின் கண்கள் காம்பு போன்ற இரு சிறு உறுப்புகளின் நுனியில் அமைந் துள்ளன. இந்தக் காம்புகள் அசையக் கூடியவை. வேண்டும் போது காம்புகளை உயர்த்திப் பார்க்கும் நண்டு. மற்ற நேரங்





களில் மேல் ஓட்டின் முன் விளிம்பிலுள்ள பள்ளங்களில் காம்புகளை மடித்து வைத்திருக்கும்.

நண்டு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வரும் முதல் நிலை சோயியா எனப் படும். அது மிக நுண்மையானது. ஒளி ஊடுருவும் தன்மை கொண்டது. நீரின் மேல் பரப்பில் உருண்டையாகவும், முட்களுடனும் நீந்திக் கொண்டிருக்கும். குஞ்சு வளர வளர தோலுரிக்கும். பிறகு மெகலோப்பா நிலையை அடையும்போது ஓரளவு நண்டின் உருவம் ஒத்திருக்கும். மீண்டும் வளர்ந்து, தோலுரித்து முதிர்ச்சி யடையும். நன்னீரில் வாழக்கூடிய நண்டுகளின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளி வரும் போதே பெற்றோரை ஒத்திருக்கும்.

செவுள்களால் சுவாசிக்கின்றன நண்டுகள். மேல் ஓட்டின் பக்கவாட்டில் செவுள்கள் உள்ளன. கரைகளில் வாழும் நண்டுகள் அவ்வப்போது செவுள்களை நீரில் நனைத்துக் கொள்கின்றன. நிலத்தில் வாழும் நண்டுகளுக்கு மூச்சு அறை பெரிதாக இருக்கும்.

நண்டுகளில் பல வகைகள் உள்ளன. பெரும்பாலான நண்டுகள் கடலில் வாழ்கின்றன. நிலத்தில் வாழும் நண்டுகள் வளை தோண்டி வாழ்கின்றன. இனப் பெருக்கக் காலத்தில் நீர்நிலைகளை நோக்கிச் செல்கின்றன.

ஹெர்மிட் கிராப் எனப்படும் நண்டுக்கு ஆமைக்குப் போல உடலின் மேல் தடித்த ஓடு இருக்கும். இந்த நண்டுக்கு ஆபத்து ஏற்படும் போது நத்தை, ஆமையைப் போல உடல், கால்களைச் சுருக்கி ஓட்டுக்குள் வைத்துத் தப்பி விடும்.

சிறு பூச்சி, புழு, பாசிகளை நண்டு உண்ணும். சில நண்டுகள் சிறிய உயிர்களை வேட்டையாடிச் சாப்பிடுவதும் உண்டு. ஆகாயத்தோட்டி என்று காகத்தைக் குறிப்பிடுகிறோம். நண்டும் ஒரு தோட்டிதான். தாம் வாழும் நீர் நிலைகளில் உள்ள அழுக்குகளை உண்டு சுத்தப் படுத்துகிறது. வயல்களில் வாழும் நண்டுகள் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன.


நண்டுகள் பல்வேறு அளவுகளிலும் நிறங்களிலும் காணப்படுகின்றன. ஒரு செ.மீ., முதல் 30 செ.மீ. அளவுள்ள நண்டுகள் உள்ளன. ஜப்பானியக் கடலில் மிகப் பெரிய நண்டுகள் வாழ்கின்றன. வயல், மரங்கள், பாறைகள், மணல்வெளிகளில் வாழும் நண்டுகள் பழுப்பு, பிரௌன் நிறங்களில் காணப்படுகின்றன. பாசி படர்ந்த இடங்களில் உள்ள நண்டுகள் பச்சை நிறமாகவும், இருண்ட பகுதிகளில் ஆழ்ந்த சிவப்பு, கறுப்பு, பிரௌன், மஞ்சள் போன்ற நிறங்களிலும் காணப்படுகின்றன. எதிரிகளின் கண்களுக்குச் சட்டென அடையாளம் தெரியாமல் இருப்பதற்கே இயற்கை இப்படிப்பட்ட நிறங்களை அளித்திருக்கிறது நண்டுகளுக்கு.

விடுகதைக்கு விடை சொன்னால் நிரபராதி!



சிறு வயதில் நம் தாத்தா, பாட்டி கதைகளையோ, விடுகதைகளையோ சொன்னால் நமக்கு எவ்வவு மகிழ்ச்சி ஏற்படுகிறது!

'விடுகதை' ஒவ்வொரு நாட்டிலும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதைக் கேட்டால் நாம் உண்மையில் வியப்படைவோம்.



கிரேக்கம் : முன் காலத்தில் கிரேக்க நாட்டிலும் - ரோமாபுரியிலும் பள்ளிகளில் விடுகதைப் பாடம் கட்டாயப் பாடமாக இருந்தது. விடுகதைகளை எப்படி விடுவிப்பது? புதிய புதிய விடுகதைகளை எப்படி இட்டுக் கட்டுவது என்று சொல்லிக் கொடுக்க விடுகதைப் பாடம் கட்டாயப் பாடமாக இருந்தது.

விருந்தின் பொழுது விடுகதைகளுக்கு விடை கூறுபவர்களுக்கு மாலை போட்டு "வாழ்க! வாழ்க!" என்று வாழ்த்துக் கூறுவார்களாம்.

துருக்கி : பெண் பார்க்க வரும் இளைஞரிடம் மணப்பெண் விடுகதை போடுவாளாம். சரியான விடை கூறுபவனுக்கே பெண் கொடுப்பார்கள்.

விடை தெரியாதவன் பிரம்மச் சாரியாகவே இருக்க வேண்டுமாம். வயல்களில் யார், யார் விடுகதைகளுக்குச் சரியான விடை கூறுகிறார்களோ அவர்களுக்கு நல்ல விளைச்சல் உண்டாகும் என்றும் நம்பினார்கள்.


ஆப்ரிக்கா : விடுகதை விளையாட்டுக்களை நடத்துவார்கள். குழுக்களை அமைத்துக் கொண்டு விளையாடுவார்கள். தோற்றவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு விருந்து வைக்க வேண்டும். பிஜித் தீவிலும் இம் மாதிரி விளையாடுவார்கள்.

'மாகுவா' என்ற இனத்தாரிடையே கல்யாண வயது பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒரு சடங்கு நடத்துவார்கள. அதாவது விடுகதைகளுக்கு விடை கூறப்பழக்குவார்கள். விடை கூறிவிட்டால் வாழ்க்கையில் துன்பமே வராது, எதையும் எளிதில் சமாளிப்பார்கள் என்பது அவர்கள் நம்பிக்கை. அங்கு வாழும் இன்னொரு பழங்குடியினரிடம் ஒரு விடுகதை விசித்திரம் நடைபெறுகிறதாம். ஒருவன் குற்றம் செய்துவிட்டால் அவனை விசாரிக்கும் நீதிபதி பொறுமையாக நியாயத்தைத் கேட்பார். சாட்சிகளை விசாரிக்க மாட்டார். குற்றவாளியிடம் சிலவிடுகதைகளைக் கூறுவார். அதற்கு விடை கூறினால் நிரபராதி. இல்லையேல் தண்டனையாம்.

ஹவாய்த் தீவு : இங்கு மல்யுத்தம், ஈட்டி எரிதல், குத்துச் சண்டை முதலிய போட்டிகள் நடைபெறும். அதில் விடுகதைப் போட்டியும் நடைபெறும். தோற்றவன் வெற்றி பெற்றவனுக்கு அடிமை ஆவானாம்.


- துரைமுருகேசன்


இரும்புக் கவசம்
வேணுவாரியத்
காட்டில் ஒரு புலியும் முயலும் வசித்து வந்தன.
நான் உன்னைக் கொல்லப் போறேன்.
தயவுசெய்து எனக்குக் கருணை காட்டு.
தயவுசெய்து காயப்படுத்தாதே. நான் ரொம்ப பலவீனமா இருக் கேன். நான் நினைத்தால் உனக் குச் சரியான பாடம் கற்பிக்க முடியும்.
ஹா, ஹா எனக்கா? இந்தா ஓடிப் போ.
ஆ... ஐயோ...
ஒருநாள் –
ஹை! ஐந்நூறு ரூபாய் நோட்டு!
எனக்கு ஒரு நல்ல யோசனை தோணுது.
500
www.kuttu.com


முயல் கொல்லனிடம் சென்றது.
உன்னால் எனக்கொரு இரும்புக் கவச உடை செய்து தர முடியுமா?
ஏன் முடியாது? இரண்டு நாட்கள் கழித்து வா.
இரண்டு நாட்களுக்குப் பிறகு –
இந்தா உன்னுடைய இரும்புக் கவச உடை.
இது எனக்குச் சரியாக இருக்கும் போலிருக்கிறது.
அப்போதிலிருந்து முயல் இரும்புக் கவச உடையை அணிந்து கொண்டுதான் வெளியில் சென்றது.
ஒருநாள்...
ஏய், நான் உன்னைத் தின்னப் போறேன்.
என்னைக் கடிக்க முயலாதே. என்னை உன்னால் கொல்ல இயலாது.
sai features



பசியெடுத்த புலி முயலைப் பாய்ந்து பிடித்தது.
அடுத்த நொடி –
பாரு, நான் முதலிலேயே என்கிட்ட விளையாடாதேன்னு சொன்னேன்.கேட்டியா?
ஆ...ஆ... ஐயோ...!
இரும்புக் கவசத்தைக் கடித்த புலி, பற்கள் உடைந்து வலியில் துடித்தது.
இந்த உடையின் உதவியால் உன்னை என்ன வேணாலும் பண்ணுவேன்.
ஆ!
ஐயோ!
அந்தப் பக்கம் வந்த விவசாயி –
என்ன அதிசயம் முயல் புலியைத் துரத்துகிறதே!
என்ன ஒரு அவமானம்.



மிகப்பெரிய பழம்!

மிகுந்த சுவையையும், அபார வாசனையையும் கொண்ட பலாப்பழம் தென்னிந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்றது. பழ வகைகளில் மாம்பழம், வாழைப்பழம் போல பலாப்பழமும் அனைவராலும் விரும்பக் கூடியதாக இருக்கிறது. ஈரப்பதமுள்ள, செழுமையான மண் நிறைந்த நிலங்களில் பலா மரம் நல்ல விளைச்சலைத் தருகிறது.

நல்ல முதிர்ச்சி பெற்ற பலா மரமானது ஐம்பது அடிக்கும் மேல் வளருகிறது. பலா மரம் விதைகள் மூலம் செடியாகி, பிறகு மரமாக வளருகிறது. சாதாரணமாக, பலா மரமானது பயிரிட்ட எட்டு வருடங்களுக்குப் பிறகே விளைச்சலைத் தர ஆரம்பிக்கிறது.

சிங்காபுரி, சிலோன் போன்ற பலா வகைகள் பயிரிட்ட மூன்று வருடங்களிலேயே விளைச்சலைத் தருகின்றன. ஒரு பலாமரமானது விளைச்சல் காலத்தில் சுமார் 250 பலாப் பழங்களைத் தரக் கூடியது.

மார்ச் முதல் ஜூலை வரை நல்ல விளைச்சலைத் தரக் கூடிய காலம். நன்கு விளைந்த ஒரு பலாப்பழமானது சராசரியாக 20 கிலோ எடையைக் கொண்டது. பலாப்பழமானது கரும் பச்சை நிறத்துடன் கூடிய சொர சொரப்பான தடித்த வெளிப்புறத் தோலைக் கொண்டது. பழுக்க ஆரம்பித்தவுடன் நல்ல சுவையையும், வாசனையையும் வெளிப்படுத்தும். வெளிப்புறத் தோல் பழுப்பு அல்லது வெளிர் மஞ்சள் நிறமாக மாறுகிறது.

சிங்காபுரி, ருத்ராக்ஷி வகை பலா மரங்கள் ஒரே அளவிலான பழங்களைத் தருவதால் பழத்தோட்டங்களில் இவ்விரு வகை மரங்களை அதிகம் வளர்க்கிறார்கள்.

பலாச்சுளை குறைந்த அளவு நார்ச் சத்தும், குறைந்த அளவு கலோரியையும் கொண்டது. பலாப் பழத்தின் ஒவ்வொரு 100 கிராமிலும் 175 மில்லி கிராம் கரோட்டீனும் 07 மில்லி கிராம் வைட்டமின் 'சி'யும் உள்ளன.


பலாப்பழத்தைக் கொண்டு எத்தனையோ சுவை மிக்க உணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்கலாம். கேரளாவில் பலாப்பழத்தைக் கொண்டு தயாரிக்கப்படும் 'சக்கைப் பிரதமன்' என்றொரு பாயஸ வகை புகழ் பெற்ற ஒன்று. 'இலை அடை' என்றொரு சுவை மிகுந்த பண்டத்தையும் தயாரிக்கிறார்கள்.

பலாக் கொட்டைகளும் சத்து மிகுந்தது. பலாக் கொட்டைகளை வறுத்தும், வேக வைத்தும் சாப்பிடலாம். வெய்யிலில் பலாக் கொட்டைகளைக் காய வைத்து, இடித்துப் பொடியாக்கி 'சூப்'பில் சேர்க்கிறார்கள். 'பலாமுசு' என அழைக்கப்படும் பழுக்காத பலாக்காயை பருப்புடன் சேர்த்து சமைக்கலாம்.

பழத்தின் நார்ப்பகுதியும், வெளிப்புறத் தோலும் கால்நடைகளுக்குத் தீனியாகப் பயன்படுகின்றன. பலா இலைகள் ஆடுகளுக்குத் தீனியாகவும் கொடுக்கப்படுகிறது. பலா சிப்ஸுகளும் செய்யப்படுகின்றன.

— எஸ். ராஜகோபால், திருச்சி.

விஷம விச்சு


விச்சுவும், ராமுவும் சைக்கிளில் நண்பன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர்.
என்னை மாதிரி வேகமா ஓட்ட முடியாதுடா விச்சு!
அட போடா, ஒரு கையை விட்டுட்டு ஓட்டமுடியுமா உன்னால் ?
இதென்ன பிரமாதம்! இரண்டு கையையுமே விட்டுட்டு ஓட்டுவேண்டா விச்சு.
என்னை மாதிரி ஒருநாளும் நீ இப்படி ஓட்ட முடியாது. எல்லாத்துக்கும் தைரியம் வேணும்டா.
அப்பொழுது எதிரே சைக்கிளில் முட்டையை எடுத்துக் கொண்டு ஒருவர் வந்தார்.
முன்னால பார்க்காமல், ஏன் கண்ணை மூடிக்கிட்டுக்கூட ஓட்டுவேன், பாரு.
ஏய், முன்னால பாருடா ராமு.
முட்டை வியாபாரி மீது மோதி விழுந்தான் ராமு.
டமால்
பாவம் முட்டைக்காரர். சாகசமா பண்றே? உங்க அப்பாவைக் கூட்டிட்டு வரேன். அவரும் நாலு போடுவார்.

கோகுலம் க்விஸ் முடிவு!

பிப்ரவரி மாத க்விஸ் போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அதில் நிறைய பேர் சரியான விடைகளை அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.


சரியான விடை :

1. கேரள முதல்வர், ஈ.கே. நாயனார்.
2. அண்மையில் சாஹித்ய அகாதமி விருது பெற்ற தமிழர் தி.க.சிவசங்கரன்.
3. கிரிக்கெட் ஆட்டக்காரர் அடித்த பந்தை எதிரணியினர் தேடி எடுக்க முடியவில்லையென்றால் அவருக்கு 6 ரன் கிடைக்கும்.
4. தற்போது லியாண்டர் பயஸ் உடன் இணைந்து டென்னிஸ் ஆடி வரும் வீரர் மகேஷ் பூபதி.
5. நம் உடலில் உள்ள பெரிய உறுப்பு தோல்.
6. சிறப்பு ஆஸ்கார் விருது பெற்ற இந்தியர் சத்யஜித்ரே.
7. நூறு மைல் தூரம் வரை தண்ணீர் குடிக்காமலேயே பயணம் செய்யக் கூடிய விலங்கு ஒட்டகம்.
8. காகிதத்தை மடித்து உருவங்கள் உருவாக்கும் ஓரிகாமி கலை ஜப்பானில் தோன்றியது.
9. சந்திரனுக்கு முதலில் விண்வெளி ஓடத்தை அனுப்பிய நாடு ரஷ்யா.
10. கபடி இந்தியாவுக்குச் சொந்தமான விளையாட்டு.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. வி. ஜான்ஸி ராணி, மதுரை.
2. எஸ். ஸ்ரீவித்யா, சுந்தரப் பெருமாள் கோயில், தஞ்சை மாவட்டம்.
3. பி. என்.ஹாஸ்மி, விநாயகம்பட்டி, சேலம் மாவட்டம்.
4. வி. வேங்கட சுப்ரமணியம், சென்னை.
5. கே. கருப்பசாமி, செங்குன்றபுரம்.
6. ந. மீனாகுமாரி, மதுரை.
7. செ. கார்த்திக் ராஜ், கோவை.
8. ஆர். தங்கராஜ், பெரிச்சிபாளையம், திருப்பூர்.
9. ப. முபீன், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம் மாவட்டம்.
10. பி. பி. கிருஷ்ண பிரசாத், வித்யா நகர், சேலம் மாவட்டம்.
11. பா. பிரவீன்குமார், ஈரோடு.
12. ரா. மாரிமுத்து, நடுக்குப்பம், விழுப்புரம் மாவட்டம்.
13. எம். ஹர்ஷிணி, உறையூர், திருச்சி மாவட்டம்.
14. உ. காசிநாதன், சோழபுரம்.
15. வி. அஜய்ராஜா, ஆறாம் வகுப்பு, சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம்.
16. ஆர். ஜெபசித்ரா, பதினோராம் வகுப்பு, மகளிர் மேல்நிலைப் பள்ளி, தோட்டப்பாளையம், வேலூர் மாவட்டம்.
17. டி. மோகன், மேலப்புலம்புதூர், வேலூர் மாவட்டம்.
18. ஏ. சில்வியா, ஜெய்ஹிந்த்புரம், மதுரை.
19. எஸ். கவிதா, திருநெல்வேலி.
20. மம்தா, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



உங்கள் எதிர்கால வழிகாட்டி

பேச்சாளர் ஆவது

உங்கள் பள்ளியில் நடக்கும் பாரதி விழா, தமிழ் மன்றம், சுதந்தர தின விழா ஆகியவற்றின்போது பேச்சுப் போட்டியில் பரிசுகளைத் தட்டிக் கொண்டு போகும், உங்கள் நண்பர்களைப் பார்த்து 'எப்படித்தான் இவ்வளவு சிறப்பாகப் பேச முடிகிறதோ' என்று வியந்து போகிறீர்களா...! 'நம்மாலும் இது போன்று மேடையில் பேச முடியுமா?' என்று ஏங்குகிறீர்களா? உங்களாலும் முடியும். முயன்றுதான் பாருங்கள்.

பேச்சுக்கலை என்பது மாபெரும் கலை. அந்தக் கலையில் வல்லவராவதற்குச் சில நுட்பங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு பயிற்சி முறைகளைக் கையாள வேண்டும். சாதாரணமாக வீட்டில் அழகாகப் பேசுபவர்கள், மேடையேறி விட்டால் அவர்களுக்குத் தடையின்றிப் பேச வராது. கை- கால்கள் நடுங்கும். இதற்குக் காரணம் மேடைக் கூச்சம், பயிற்சியின்மை. 'பேச்சு' என்றால் என்ன? ஒலி, பொருளோடு பொருந்தி வந்தால் அதன் பெயர் பேச்சு. எழிலோடு பின்னப்பட்ட



பேச்சு ஏற்றமிகு மேடைப் பேச்சாகிறது.

பேசுபவர்கள் எல்லோரும் பேச்சாளர்களோ சொற்பொழிவாளர்களோ அல்ல! ஜனநாயக நாடான நமது நாட்டில் பேச்சு அரசியல் வாழ்வின் உயிர் மூச்சாக இருக்கிறது. பேச்சாற்றலைப் பெறுவது எப்படி? 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்றார் ஔவையார். முதலில் உச்சரிப்புகளைச் சரியான விதத்தில் உள்ளத்தில் பதிய வைப்பது முக்கியம். வகுப்பில் ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது அவர்கள் சொல்லும் வார்த்தைகளைக் காதில் மடக்கிப் பிடிக்க வேண்டும். சின்னஞ்சிறு வயதிலேயே இந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு உங்கள் பெற்றோர் துணை நிற்க வேண்டும். சீரான உச்சரிப்பைப் பெற வேண்டும். 'ல்' 'ள்' 'ழ்' போன்றவற்றைச் சரியான முறையில் உச்சரிக்க வேண்டும். 'அடடா! கடலாடி வெள்ளைக் கோழி; கிழடல்ல! மலடல்லவே!' என்ற வாக்கியத்தை அடிக்கடி சொல்லிப் பாருங்கள். இதில் 'ள்' 'ழ்' 'ல்' என்ற மூன்றெழுத்துகளும் இருப்பதால் நாவிற்குப் பயிற்சியும் பழக்கமும் கிடைக்கும். அதேபோல அச்சுப் பிழை இல்லாத புத்தகங்களைப் படிக்க வேண்டும். அச்சுப் பிழை இல்லாத நூல்கள் - உச்சரிப்பு பிழையின்றி போதிக்கும் ஆசிரியர்கள். அதேபோல சிறந்த சொற்பொழிவாளர்களின் பேச்சைக் கேட்க வேண்டும்.

நமது நாவை பயிற்றுவிப்பதில்தான் வெற்றியின் மூலமே இருக்கிறது. சிறு, சிறு கவிதைகளை உரத்த குரலில் படித்



எப்படி?

துப் பார்க்க வேண்டும். சிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளையும் அவ்வாறே மீண்டும், மீண்டும் உரக்கப் படிக்க வேண்டும். பேச்சுக் கலையில் சிறந்து விளங்க ஆசைப்படுபவர்களுக்கு முதலில் ஒரு 'உந்துதல்' வேண்டும். ஆர்வமற்ற எதுவும் ஆற்றலாகப் பளிச்சிடாது. ஆர்வமும், ஆசையும் இணைந்து வர, இடைவிடாத பயிற்சியும் முயற்சியும் இருக்க வேண்டும். இவையே அடித்தளங்களாக அமைய வேண்டும்.

பேச்சாளர்களுக்கு மிகவும் தேவையான மூலப்பொருள் 'சொற்கள்'. கருத்து மாளிகை, சொற்கள் எனப்படும் செங்கற்களால்தான் எழுப்பப்படுகிறது. எப்படிப்பட்ட எண்ணங்களையும் எடுத்துச் சொல்ல 'சொற்கள்' தேவைப்படுகின்றன. இதற்குச் சிறுகச் சிறுகச் சேர்ப்பதுதான் வழி. படிக்கும்போது காணும் சிறந்த சொற்களையும், சொற்பொழிவுகளில் கேட்கின்ற வளமான சொற்களையும் உள்ளக் கூடையில் எடுத்துப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பொருள் தெரியாமல் இருந்தால் அகராதியில் பொருள் பார்த்துக் கொள்ளலாம். சொற்பொழிவாளர் முதலில் தேட வேண்டிய செல்வம் சொற்களே! அதேபோல பெயர்களைத் தெரிந்து கொள்வதும் முக்கியம். அன்றாடம் விஞ்ஞானம் வளர்ந்து வரும் இந்நாளில் பத்திரிகைகளில் வரும் புதிய, புதிய பெயர்களை நினைவு அலமாரியில் அடுக்கி வைக்க வேண்டும். விவசாயிகள் நிறைந்த கூட்டத்தில் பேசும்போது 'தழை' உரம், சாணம்' என்று பழைய பாணியில் பேசாமல் 'அமோனியா, யூரியா, என்று பேசினால்தான் அவர்களைப் பேச்சால் கட்டிப் போட முடியும்.

****


கருத்து, மாளிகை, சொற்கள் எனப்படும் செங்கற்களால்தான் எழுப்பப்படுகிறது.

****

'பலர் அறிய அவமானப்பட நேருமோ' என்ற எண்ணமே, உங்களைப் போன்றவர்களுக்கு மேடைக் கூச்சத்தை, பயத்தைக் கொடுக்கிறது. முதலில் இவற்றை உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும். விளக்கில் எண்ணெய்யும், திரியும் இருந்தால் பற்ற வைத்தவுடன் கண்டிப்பாக எரியும். சில

இலக்கியச் செம்மல்
குமரி அனந்தன்

குறிப்பிட்ட வழிமுறைகளைக் கடைபிடித்தால் நீங்களும் சிறந்த பேச்சாளராக உருவாக முடியும். தொடக்கப் பேச்சாளர்கள் தாங்கள் பேச விரும்புவதை முதலில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். மனப்பாடமும் செய்து கொள்ளலாம். ஏனென்றால் மேடையில் ஏறி நின்ற பிறகு சொற்களைத் தேடுவது துவக்கக் கால பேச்சாளர்களுக்கு மிகவும் கடினமாக் இருக்கும். இன்று மக்களால் பாராட்டப்படும் பெரிய பேச்சாளர்கள்கூட பேசும்போது சிறிய தாளில் குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்கிறார்கள். பேச்சை எழுதி வைத்துக் கொண்டதை உரக்கப் படித்துப் பழக வேண்டும். அதில் வரும் சொற்களுக்கு நாக்கைப் பழக்கப் படுத்த வேண்டும். தடுமாற்றம் தரும் சொல்லோ அல்லது சொற்களின் கூட்டமைப்போ இருந்தால் அவற்றை மாற்றி எளிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக 'நெஞ்சார்ந்த வெஞ்சினம் நஞ்சிலும் கொடியது' என்றிருந்தால் 'கோபம் கொடியது; நஞ்சிலும் கொடியது' என்று எளிமைப்படுத்த வேண்டும்.



பேச வேண்டிய கருத்துக்களை வரிசையாக முறைப்படுத்தி எழுதிக் கொண்ட பிறகு அதை மனப்பாடம் செய்து கொள்வது முதற்பணி. ஒவ்வொரு பத்தியின் முதல் சொல்லையும், மையக் கருத்தைக் குறிக்கும் ஒன்றிரண்டு சொற்களையும் ஒரு வரியில் சிறு குறிப்பாய் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக முதல் சொல் உலகம் என்றும் முதற் பத்தியின் கருத்து 'ஒழுக்கம்' பற்றியது என்றால் 'உலகம் – ஒழுக்கம்' என்று குறித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு குறிப்புகளைத் தயார் செய்து கொண்டு மேடையேறினால், உங்கள் நினைவாற்றலைத் தூண்டி விடுவதற்கு எளிதாக இருக்கும். இதில் முக்கியமானது, கருத்துக்களை வரிசையாகச் சொல்லிக் கொண்டே வரும்போது மனக்கண்ணில் முழு சொற்பொழிவும் திரைப்படம் போல ஓடிக் கொண்டிருக்க வேண்டும். நன்றாக மனப்பாடம் ஆகிவிட்டால் சொற்கள் அருவி போல கொட்ட ஆரம்பித்து விடும். இருப்பினும் கற்றவர்கள், அறிஞர்கள் முன்னிலையில் பேசத் துவங்கும் முன் பலரை அச்சம் ஆட்கொண்டு விடுகிறது. அச்சத்தால் சலனம் கொண்ட மனம் ஒருமுகப்படுத்தும் சக்தியை இழக்கிறது. நினைவுச் சக்கரத்தைச் சுழற்ற முடியாமல் தடுமாறுகிறது. அப்போது ஊன்றுகோலாகப் பயன்படத் தான் சிறு குறிப்புகள்.

பேசப் போவதற்கு முன், வீட்டில் தாமே பேசிப் பழகலாம். பெற்றோர்களிடமோ நண்பர்களிடமோ பேசிக் காட்டலாம். பேச்சைத் துவங்கும்போதே அவையடக்கம்' என்ற பெயரில் அளவுக்கு மீறி தன்னைப் பேச்சாளர் தாழ்த்திக் கொள்ளத் தேவையில்லை. அப்படிச் செய்தால் கூட்டத்தினருக்குப் பேச்சாளரைப் பற்றிய அலட்சிய நோக்கு உருவாக வாய்ப்பு இருக்கிறது. பேச்சாளரிடம் பணிவு இருக்க வேண்டும்; பயம் இருக்கக் கூடாது. ஒருவர் தான் தொடர்பு கொண்டுள்ள துறையைப் பற்றி அதிகம் பேசாமல் மாறுபட்ட துறையைப் பற்றி பேசும்போது அவையோர் ஆச்சர்யமடைவர். அதேபோல் "இன்று நான் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட பொருள் என்னவென்றால்..." என்று தொடங்கத் தேவையில்லை. உங்களுக்

பேச்சில் மிக வேகமும், அதிக நிதானமும் தவிர்க்கப்பட வேண்டும்.


குப் பேசும் பொருளாகத் தலைப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருக்குமானால், உங்களைப் பேச அழைக்கும்போதே 'இன்ன தலைப்பில் பேசுவார்' என்று தலைவர் அறிவித்திருப்பார். தலைப்பு 'எதுவும் கொடுக்கப்படாமல் பேச அழைக்கப்பட்டிருந்தால் 'தலைப்பை' அவையோருக்குக் கூறுவதில் தவறில்லை. அதைக் கூட பேச்சின் முதற்பகுதியிலேயே மக்கள் புரிந்து கொள்ளுமாறு பேசுதல் மிகவும் சிறப்பாகும். பேச்சில் மிக வேகமும், அதிக நிதானமும் தவிர்க்கப்பட வேண்டும். பேசிக் கொண்டே வரும்போது ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்லத் தவறி விட்டால் அதை நினைத்து தடுமாற வேண்டியதில்லை. 'நான் கூற வேண்டிய ஒன்றை மறந்துவிட்டேன்; அதை முதலிலேயே குறிப்பிட்டிருக்க வேண்டும்' என்று மன்னிப்பு கேட்கும் தோரணையில் விட்டுப் போன கருத்தைச் சொல்ல முயலக் கூடாது. குறிப்பிட்ட கருத்து விட்டுப் போனால் கவலைப் படக்கூடாது. மறுமுறை இக்குறை நிகழாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று உறுதி எடுத்துக் கொண்டால் போதுமானது.



மக்கள் மத்தியில் தோன்றும் சொற்பொழிவாளர் தம் தோற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும். 'தோற்றப் பொலிவு' கூட்டத்தில் ஒரு கவர்ச்சியை உருவாக்குவது இயல்பு. உடையணிந்து கொள்ளும் முறையிலும், நடந்து கொள்ளும் முறையிலும்தான் ஒருவரைப் பற்றிய உருவமைப்பு மக்களிடம் உருவாகிறது.

'மண்ணைத் தோண்டி அடித்தளம் இட வேண்டும்' என்று பேசும்போது கைகளை விண்ணை நோக்கி உயர்த்தக்கூடாது.

பேச்சாளருக்கு உணர்ச்சியை வெளிக் காட்டும் திறமை இருக்க வேண்டும். அகத்தில் எழுவதை முகத்தில் எடுத்துக்காட்டும் ஆற்றல் இருந்தால் அது பெரும் பேறு. 'மண்ணைத் தோண்டி அடித்தளம் இட வேண்டும்' என்று பேசும்போது கைகளை விண்ணை நோக்கி உயர்த்தக்கூடாது. வளரும் பேச்சாளர்கள் சிலரை வழிகாட்டிகளாகக் கொள்வது தவறாகாது. இருந்தாலும் தனக்கென்று ஒரு பாணியை அமைத்துக் கொள்ள வேண்டும். எடுத்தவுடன் உரத்த குரலில் துவங்கக் கூடாது. மெதுவாகத் துவங்கினால் சீராகத் தொடரலாம். குறிப்பாக இலக்கிய கூட்டங்களில் உரத்த குரலில் பேசவே கூடாது. சிலர் சாதாரணமாகப் பேசும் குரலிலிருந்து மாறுபட்டு மேடைகளில் போலியான மாற்றுக் குரலில் பேசுவார்கள். இது தவறு. தனது இயல்பான குரலில்தான் மேடையிலும் பேச வேண்டும். நல்ல குரல் வளம் பெற்றவர்கள் மேடைப் பேச்சாளர்களாக பயிற்சி பெற்றால் மிக விரைவிலேயே பெரும் புகழும் பெறலாம். இப்போது பேச்சுக்கலை தொழில்ரீதியாகக் கூட மாறிவிட்டது.



இதுவரை நான் சொன்னவை பேச்சுக்கலையில் கரை சேருவதற்கான அடிப்படை விஷயங்கள்தான். நெடுஞ்சாலையிலிருந்து பல கிளைச்சாலைகள் பிரிந்து செல்வதைப் போல இந்தக் கலையின் பரிமாணங்கள் கணக்கற்றவை. இந்தக் கட்டுரையை வழிகாட்டியாகக் கொண்டு பள்ளிக்கு இரண்டு பேச்சாளர்களாவது உருவானால் நான் மகிழ்ச்சியடைவேன்.

தொகுப்பு: **ப்ரியன்**



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ராகுல், ஸ்வேதாவைப் போல் நீங்களும் கோகுலத்திற்குக் கதை, ஓவியம் அனுப்பு விரும்புகிறீர்களா? அப்படியென்றால் கோகுலத்திற்கு சந்தா செலுத்துங்கள்... உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

வரலாற்று நாயகர்!

'சர் டான் பிராட்மேன்' என்ற பெயரை கிரிக்கெட் தெரிந்த யாருக்கும் தெரியாமல் இருக்க முடியாது. ஏனென்றால் அவரது கிரிக்கெட் சாதனை அவ்வளவு உயர்ந்தது. 1908ஆம் ஆண்டு பிறந்த பிராட்மேன் 1928ஆம் ஆண்டு முதல் கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தார். அப்போது அவருக்கு வயது 20. தொடர்ந்து 20 ஆண்டுகள் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த பிராட்மேன் 1948ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் விளையாடியதுடன் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6,996 ரன்கள் எடுத்திருக்கிறார். அவரது ஓர் இன்னிங்ஸ் சராசரி 99.94. அதிகபட்சமாக இங்கிலாந்து அணிக்கு எதிராக 334 ரன்கள் குவித்துள்ளார்.



• பிராட்மேன்

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இவர் ஒருவர்தான் இவ்வளவு சராசரி உள்ளவர்.

1930ஆம் ஆண்டு களமிறங்கி ஒரே நாளில் மட்டும் 309 ரன்களைக் குவித்தார் பிராட்மேன். இவருக்கு முன்பும் சரி, பின்பும் சரி இவரது சாதனைகளில் பாதி சராசரியைக் கடந்தவர்கள் ஒரு சிலரே. 92 வயதான ஆஸ்திரேலிய வீரர் பிராட்மேன் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் அவரது சாதனை என்றும் நிலைத்து இருக்கும்.


'ஸ்டீவ் வாஹ்' என்றாலே வெற்றி என்று அர்த்தமோ? இவர் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி தொடர்ந்து 15 டெஸ்ட் போட்டிகளை வென்று சாதனை படைத்து விட்டு இந்தியாவுக்கு வந்திருக்கிறது. இந்திய அணியுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு தினப் போட்டிகளில் விளையாட இருக்கிறது ஆஸ்திரேலிய அணி. முதல் டெஸ்ட் மும்பையில் துவங்கியது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா இந்தியாவை பேட்டிங் செய்ய பணித்தது.



• ஸ்டீவ் வாஹ்

முதலில் களமிறங்கிய இந்தியா 176 ரன்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்துவிட்டது. சச்சின் டெண்டுல்கர் மட்டுமே 76 ரன்கள் எடுத்தார். பின்னர் ஆடத் தொடங்கிய ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 349 ரன்களைக் குவித்தது. இரண்டாவது இன்னிங்ஸிலாவது நன்றாக ஆட மாட்டார்களா என ரசிகர்கள் ஏங்கிக் கொண்டிருக்க, 219 ரன்களுக்கு ஆட்டமிழந்தது இந்திய அணி. இதிலும் டெண்டுல்கர் மட்டும் அதிகபட்சமாக 65 ரன்களை எடுத்திருந்தார்.

47 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 7 ஓவர்களில் வெற்றியைத் தொட்டது. இது ஆஸ்திரேலிய அணிக்குப் பதினாறாவது வெற்றி. ஐந்து நாள் ஆட்டம் 3 நாட்களிலேயே முடிந்து விட்டது. பேட்டிங்கிலும் சரி, பௌலிங்கிலும் சரி இந்திய அணி கடுமையாக உழைக்க வேண்டும் என்பதையே இந்தத் தோல்வி உணர்த்துகிறது.



"அழகன் மாதிரி ஒரு நண்பனும் குமரன் மாதிரி ஒரு நாயும்... சாரி... இன்னொரு நண்பனும் கிடைத்தால் செந்தில் மட்டுமல்ல; யார் வேண்டுமானாலும் எந்தத் துயரத்திலிருந்தும் மீளலாம்" என்கிறார் கோவையிலிருந்து பி. சவிதா.


திருவண்ணாமலையி லிருந்து ஆர். யாமினி "அழகன், செந்தில், குமரன் தொடர் ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இருந்தது. செந்திலின் பாத்திரப் படைப்பு மிகவும் அருமை. மூவரும், என் நினைவில் நிலைத்திருப்பார்கள்" என்கிறார்.


அற்புத விஞ்ஞானி ஆர்க்கிமிடீஸ்!

"ஆர்க்கிமிடீஸ் கதையைப் படித்துக் கொண்டிருக்கும்போதே என்னை அறியாமல் கண்ணீர் வந்து விட்டது. 2500 வருடங்களுக்கு முன்பே எவ்வளவு பெரிய விஞ்ஞானி வாழ்ந்திருக்கிறார் என்பதை நினைக்கும்போது வியப்பில் ஆழ்ந்து விட்டேன். இப்படிப்பட்ட சிறந்த விஞ்ஞானிக்கு இவ்வளவு கோரமான மரணம் நிகழ்ந்திருக்க வேண்டாம்" என்கிறார் மதுரையிலிருந்து ஆர். விக்னேஷ்வரன்.

"மார்ச் இதழில் வெளிவந்த காவியத்தலைப் பாடலும் படமும் அருமை. அதிகமான சொத்து யாருக்கு? (படக்கதை), எங்கள் பள்ளியில் நடந்தது, குறுக்கெழுத்துப்புதிர், பிருந்தாவனம் போன்ற பகுதிகள் மீண்டும் படிக்கத் தூண்டின" என்கிறார் நல்லூரிலிருந்து ப.கோபிகண்ணன்.

"மந்திரத்தால் கிடைத்த மாம்பழம் படமும் சரி, கதையும் சரி நன்றாக இருந்தது. ரோஜா தலைப்பில் வெளியான அனைத்து ஓவியங்களும் ஓஹோ" என்கிறார் திருச்சியிலிருந்து வி.ஆர். கிருத்திகா.


வாயால் கெட்டவன்!
கதை : டி.ஸ்ரீகந்தராஜா, திருநாகேஸ்வரம், தஞ்சை மாவட்டம்.
படம் : மகேஸ்
பொன்னன் மிகவும் சோம்பேறி. வேலை எதுவும் செய்யாமல் பேசியே பொழுதைக் கழிப்பான். ஒருநாள் -
ராமசாமி, என்ன பார்க்காமல் போறே?
ம்... எனக்கு வேலை இருக்கு.
ஒரு நிமிஷம் வந்துட்டுப் போ!
உனக்குத்தான் வேலை இல்லை. வேற ஆளைப் பார்.
சரி, சரி. முட்டாள்கள் என்னிடம் பேச மாட்டார்கள்.
இதுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை.
மறுநாள்...
சே! பொழுதே போகலையே. எவனையும் வம்புக்கு இழுத்தால்கூட பேச மாட்டேங்கிறானே! சரி, காட்டுப் பக்கம் போயிட்டு வரலாம்.
காட்டில் ஒரு மண்டை ஓடு தென்பட்டது. உடனே பொன்னனுக்குப் பேசத் தோன்றியது.
ஏய், மண்டை ஓடே உனக்கு ஏன் இந்தக் கதி ஏற்பட்டது?
என் பேச்சினால் இந்தக் கதி ஏற்பட்டது.
என்ன! மண்டை ஓடா பேசறது? உனக்கு ஏன் இந்தக் கதி ஏற்பட்டது?
என் பேச்சினால் இந்தக் கதி ஏற்பட்டது.



ஹை! மண்டை ஓடு பேசுது. மன்னரிடம் சொல்லணும்.
பொன்னன் அரண்மனையை அடைந்தான்.
மன்னா, உங்கள் ஆட்சியில் மண்டை ஓடு பேசுகிறது.
என்ன உளறுகிறே?
உண்மைதான். தாங்கள் என்னுடன் வந்து அந்த அதிசயத்தைப் பாருங்கள்.
நாளை அந்தப் பக்கமாக வரும் பொழுது பார்க்கிறேன்.
மறுநாள், காட்டுக்கு மன்னர் வந்தார்.
மண்டை ஓடே உனக்கு ஏன் இந்தக் கதி ஏற்பட்டது?
என்ன பதிலே இல்லை?
சற்றுப் பொறுங்கள். மண்டை ஓடே...
பதில் வரவில்லை.
எனக்கு எவ்வளவு வேலை இருக்கு தெரியுமா? உன்னை மாதிரி ஆள் என்று நினைத்தாயா? காவலர்களே இவனைக் கழுத்து வரை மண்ணில் புதைத்து வையுங்கள்.
எல்லோரும் சென்று விட்டனர். பொன்னன் மண்டை ஓட்டைப் பார்த்தான்.
பொன்னா, உனக்கு ஏன் இந்தக் கதி ஏற்பட்டது?
என் அநாவசியப் பேச்சினால் இந்தக் கதி ஏற்பட்டது.
அன்றிலிருந்து பொன்னன் யாரிடமும் அநாவசியமாகப் பேசுவதில்லை.

புதிர் உலகம்



I உங்கள் நண்பரைப் பார்த்து "உன் பிறந்த தேதி, மாதம், வயது எல்லாம் நான் கூறி விடுகிறேன்" என்று சொல்லுங்கள். அவர் நம்ப மாட்டார். ஆனால் "உடனே நான் கூறுகிறபடி செய்" என்று சொல்லி விட்டுத் தள்ளி நின்று விடுங்கள்.

பிறந்த தேதியையும், மாதத்தையும் ஒரு பேப்பரில் எழுதச் சொல்லுங்கள். உதாரணமாக பிறந்த தேதி 21, மாதம் டிசம்பர் என்று வைத்துக் கொள்வோம். (அதாவது டிசம்பர் 12வது மாதம்). அவர் அதை 2112 என்று எழுத வேண்டும். தேதியையும், மாதத்தையும் ஒரே எண்ணாக எழுத வேண்டும். பிறகு அதை இரண்டால் பெருக்கச் சொல்லவும்.

2112 x 2 = 4224 என வந்திருக்கும்.

பெருக்கி வந்த தொகையுடன் ஐந்தைக் கூட்டச் சொல்லவும். 4224+5 = 4229

கிடைத்த தொகையை 50 ஆல் பெருக்கச் சொல்லவும்.

4229 x 50= 211450

பெருக்கி வந்த விடையுடன் அவரது தற்போதைய வயதைக் கூட்டச் சொல்லவும். (உதாரணமாக அவரது வயது 13 என வைப்போம்) அதாவது 211450+13 = 211463. அத்துடன் 365 கூட்டச் சொல்லுங்கள். இப்போது கடைசியாக அவருக்குக் கிடைத்த விடையைக் கூறச் சொல்லுங்கள்.

அவர் கூறும் விடை=

211463+365 = 211828

இனிமேல் உங்கள் வேலை அவர் கூறும் விடையில் 615ஐ கழித்து விடுங்கள்.

அதாவது 211828-615 = 211213

இதில் முதல் இரண்டு இலக்கம் அவர் பிறந்த தேதி – 21.

மூன்றாவது, நான்காவது இலக்கம் அவர் பிறந்த மாதம் – 12

கடைசி இரண்டு இலக்கம் அவருடைய வயது – 13

இவ்வாறு அவரிடம் கூறி அவரை ஆச்சரியத்தில் அசத்துங்கள்!

— ஸ்ரீதர், சென்னை – 91.

II ஒரு அறையில் நான்கு மூலைகள் உள்ளன. ஒரு மூலையில் கொஞ்சம் எலிகள் இருந்தன. அதில் சிலவற்றை ஒரு பூனை பிடித்தது. மீதி எலிகள் மறு மூலைக்குச் சென்றதும் இரு மடங்காகி விடுகின்றன. மீண்டும் பூனை முதல் மூலையில் பிடித்த அதே எண்ணிக்கையில் எலிகளைப் பிடிக்கிறது. இதே கதை நாலு மூலைகளிலும் தொடர்கிறது. ஆனால் நான்காவது மூலையில் பூனை எல்லா எலிகளையும் பிடித்து விடுகிறது. அப்படியானால் மொத்தம் எத்தனை எலிகள்? பூனை ஒவ்வொரு முறையும் பிடித்த ஒரே எண்ணிக்கையிலான எலிகள் எத்தனை?

– குரு. இராமநாதன்,
ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

III ஒரு வார்த்தை உள்ளது.

1) முதல் எழுத்தையும், இரண்டாம் எழுத்தையும் சேர்த்தால் பாரதி என்ற ஒரு ________ யைக் காணலாம்.

2) முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் சேர்த்தால் வீட்டுக்கு வீடு பாட்டி சொல்லும் ________ கேட்கலாம்.

3. இரண்டாம் எழுத்தையும் மூன்றாம் எழுத்தையும் சேர்த்தால் செடிக்கு ஆதாரமான ________ கிடைக்கும்.

4. இதில் உள்ள ஒரு எழுத்தான ________ பிறந்தால், வழி பிறக்கும் என்பார்கள்.

கோடிட்ட இடங்களில், உரிய எழுத்துகளை அமைத்தால் அந்த வார்த்தை கிடைக்கும். அந்த வார்த்தை என்ன?

— கு. கோவிந்தராஜன், திருபுவனம்.

விடை: 48ம் பக்கம்



அன்னதான விழா!

கொ.மா.கோதண்டம்

மலையடிவாரத்திலிருந்து சிறிது தூரத்திலிருக்கும் ஆத்தங்கரை அம்மன் கோவிலில் அன்று அன்னதான விழா! சாமி கும்பிடவும் ஆற்றில் குளித்துவிட்டு அன்னதானத்தில் சாப்பிடவும் தூரத்து கிராமங்களிலிருந்து கூட நிறைய பேர் வந்திருந்தார்கள்.

ஒரு பக்கம் சமையல் நடந்து கொண்டிருந்தது. மறுபுறம் பூஜைக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. கோவிலுக்கு முன்னே யாகத் தீ எரிந்து கொண்டு இருந்தது. மந்திரங்களை ஒலித்தபடி சுற்றிலும் ஐயர்கள் உட்கார்ந்து நெய் ஊற்றிக் கொண்டிருந்தனர்.

வனத்தின் மர நிழல்களில் வந்திருந்தவர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். 'ரங்கன ரங்கன ரங்கன ரங்கன ரங்குரங்கும்' - கிராமத்து மேளம் ஒலித்துக் கொண்டிருந்தது. அதைச் சுற்றிலும் ஒரு கூட்டம், தலைகளை ஆட்டி தாளம் போட்டுக் கொண்டிருந்தது. ஆறு அந்த இடத்தில் அகன்று ஓடிக் கொண்டிருந்ததால் முழங்காலளவு தண்ணீரில் பலர் நின்று குளித்துக் கொண்டிருந்தார்கள்.

மர நிழலில் ஆதிவாசி மக்கள் அடக்கத்துடன் உட்கார்ந்திருந்தார்கள்.

நிறைய பழுத்திருந்த நாவல் மரங்களில் குரங்கு கூட்டம் கிளைக்குக் கிளைத் தாவி ஓடியதால் கீழே விழும் நாவல் பழங்களை எடுக்க மரங்களின் கீழே சிறுவர் கூட்டமும் ஓடியாடி இயங்கிக் கொண்டிருந்தது.

விழாவுக்கு ஏற்பாடு செய்த ஊர் பெரியவரின் குடும்பம் மண்டபத்தில் உட்கார்ந்திருந்தது.

மண்டபத்தின் ஒரு பகுதியில் சமையலுக்காக தானியங்கள், காய்கறிகள் குவிந்திருந்தன. பணியாட்கள் காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தார்கள். அண்டாவில் சோறு ஆகிக் கொண்டிருந்தது.

பெரிய வீட்டுக்காரரின் பெண் கைக்குழந்தையை மண்டபத்தில் இறக்கிவிட்டு யாரையோ பார்க்க இறங்கி வேகமாக நடந்தாள். தவழ்ந்து சென்ற குழந்தை, கிடைத்த பொருட்களை எடுத்துக் கண்டபடி வீசி விளையாடியது.

அதைப் பார்த்த சமையல் ஆட்கள் அந்தக் குழந்தையை ஒன்றும் சொல்ல முடியாமல் பயந்து சும்மா இருந்தார்கள். சிறு பொருட்களை வாயில் போடுவதும் துப்புவதுமாக அந்தக் குழந்தை தவழ்ந்து சென்று கொண்டிருந்தது.

மண்டபத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் திடீரென்று எழுந்து ஆ.... ஊ..... என்று கூப்பாடு போட்டு தங்கு தங்கு என்று குதித்து ஆட ஆரம்பித்தாள். அவள் பக்கம் ஆட்கள் கூடி விட்டார்கள். அவள் மேளம் அடித்துக் கொண்டிருந்த பக்கம் சென்று மேளத்துக்குத் தகுந்தவாறு ஆடத் துவங்கினாள்.

"ஆத்தா! மாரியாத்தா! மகமாயி! காளி! பராசக்தி! பெரியாத்தா நல்ல அருள் குடுத்து ஊரைக் காப்பாத்தாத்தா. இந்த வருசம் நல்ல வெள்ளாமை வெளைய மழையைப் பெய்ய வை!" பெரிய பெண்கள் பக்கத்தில் சென்று பேசுவதும் வரம் கேட்பதுமாக இருந்தனர்.

சிலர் மஞ்சள் தண்ணீர் கரைத்துக் குடிக் கத் தந்தனர், சிலர் வேப்பிலையைச் சாப் பிடத் தந்தனர்.

அருளாடிப் பெண் வேப்ப இலை களைக் கசமுச என்று மென்று விழுங்கி னாள். இதுவரை அவளை வேலைக்காரி என்று திட்டியவர்கள், அதட்டியவர்கள், அலட்சியமாக விலகிச் சென்றவர்கள் அன்று அவள் காலில் விழுந்து "ஆத்தா! ஆத்தா!" என்று வணங்கினார்கள். திடீரென்று மண்டபத்திலிருந்து சத்தம் வரவே எல்லோரும் அங்கு ஓடினார்கள்.

கிராமத்து மேளம் ஒலித்துக் கொண்டிருந்தது. அதைச் சுற்றிலும் ஒரு கூட்டம், தலைகளை ஆட்டி தாளம் போட்டுக் கொண்டிருந்தது.

ஊர்ப் பெரியவரின் வீட்டு அம்மா "குழந்தை பேச்சு மூச்சு இல்லாமல இருக் காளே நான் என்ன செய்வேன்" என்று கதறி அழுதாள்.

அந்த வீட்டுப் பெண்கள் எல்லோரும் அழுதார்கள். குழந்தை அசைவில்லாமல் படுத்திருந்தது. அதைத் தூக்கிக் கையில் வைத்துக் கொண்டு அழுதார்கள்.

"உடனே டவுனுக்குத் தூக்கிட்டுப் போங்கய்யா. இந்தக் கூட்டத்துல யாரும் வைத்தியரே இல்லையா?"


"ஊருக்கு மாட்டு வண்டியிலே எப்ப போறது? அது வரை குழந்தை தாக்குப் பிடிக்குமா?"

ஆளாளுக்கு ஏதேதோ பேசிக் கொண் டிருந்தனர். கூட்டத்திலிருந்த ஒரு நாட்டு வைத்தியர் ஓடி வந்தார்.

குழந்தை இமையை விலக்கிக் கண் ணைப் பார்த்தார். வாயைத் திறந்து நாக் கைப் பார்த்தார். கைநாடி பிடித்துப் பார்த்தார்.

பின் தன் பையிலிருந்த மருந்தை எடுத்து ஒரு இலை பறித்து அதில் தட்டினார். இன்னொரு பாட்டிலிலிருந்த தேனை சிறிது விட்டுக் குழைத்து தன் ஆள்காட்டி விரலால் மருந்தை வழித்து எடுத்துக் குழந்தையின் வாயைத் திறந்து நாவில் தடவினார். சிறிது நேரம் கழித் தும் எந்த மாற்றமும் இல்லை.

"வண்டி பூட்டுங்கடா ஆறது– ஆகட்டும், டவுனுக்குப் போயி டாக்டர் கிட்ட காட்டலாம்" என்றார் பெரியவர். ஒரு பையன் அந்தப் பெரியவரிடம் ஓடி வந்தான். "ஐயா ஒரு விஷயம், அந்த மலைவாசிக் கூட்டத்துல ஒரு பையன் இருக்கான். அவனைக் கூப்பிட்டு பார்க் கச் சொல்லலாமே" என்றான்.



"நீங்க புது வீடு கட்டி முடிச்சிட்டீங்களே, இன்னும் குடி போகலையா?"

"இப்ப ஆடி போகக் கூடாது."

"அப்போ ஆடாம போங்க!"

– கே.வி. குமார் ஆனந்த்

"எவண்டா இவன், வைத்தியராலேயே முடியலை, எவனோ மலைவாசியாம், அவங்ககிட்ட காட்டணுமாம் போடா."

அப்போது அங்கிருந்த ஒருவர், "ஐயா இந்தப் பையன் சொல்றதத்தான் கேட்போமே, அவனும் தெரியாது னுட்டா டவுனுக்குப் போகலாம்" என்று நயந்து கூறினார்.

"சரிசரி, உடனே வரச் சொல்லு."

சொன்ன பையனோடு அவர் வீட்டு வேலைக்காரர்களும் மலைவாசிக் கூட் டத்தில் உட்கார்ந்திருந்த நீலனை அழைத் தார்கள்.

ஓவியப் போட்டி

இரவு நேரத்தில் தகதகவென ஜொலிக்கும் நிலா எல்லோரையும் ரசிக்கச் செய்யும். இருளும் நிலவொளியும் சேர்ந்த நேரத்தில் நீங்கள் ரசித்த காட்சிதான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. படம் வண்ணத்தில் வரைய வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முழுமுகவரியைத் தரவும். கடைசி தேதி: 20.4.2001



அவன் தயங்கியவாறே வந்து "என்ன சாமி கூப்பிட்டீங்களா?" என்றான். "சரிப்பா உடனே மண்டபத்துக்கு வா, ஒரு குழந்தை பேச்சு மூச்சில்லாம கிடக்கு, என்னன்னு பாரு" என்றார் பெரியவர்.

நீலன் உடனே அவசரமாக மண்டபம் நோக்கி ஓடினான். குழந்தையை வைத்து விட்டுப் பெண்கள் விலகிக் கொண்டார்கள்.

நீலன் குழந்தையின் உடம்பில் பல இடங்களில் தொட்டுப் பார்த்தான். "குழந்தை என்ன செஞ்சிகிட்டு இருந்தது?" – நீலன்.

"இங்கதாம்ப்பா தவழ்ந்து வந்து போயிக்கிட்டு இருந்தது. இப்ப திடீர்னு இப்படி ஆச்சு" என்றாள் தாய். குழந்தையின் கைவிரல்களை விரித்துப் பார்த்தான்.

"இங்க ஏதாச்சும் மாவு இருந் துச்சா" என்றான் நீலன். "ஆமாம் பச்சரிசி மாவு, உளுந்தமாவு அதோ இருக்குல்லே"– என்றாள் குழந்தையின் அம்மா.

அவன் அந்த இடத்தைப் பார்த்தான்.

தண்ணீர் கேட்டு வாங்கி குழந்தையின் வாயில் விட்டு சிறிது நேரம் அப்படியே வைத்திருந்தான். தன் விரலை குழந்தை வாயில் விட்டு எடுத்தான். அவன் விரலில் கட்டியாக சிறிது மாவு வந்தது.

குழந்தையைத் தூக்கித் தன் கைகளால் அதன் கால்களை பிடித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டு வைத்துக் கொண்டு "யாராச்சும் குழந்தை வயித்த அமுக்குங்க" என்றான்.

ஒரு கிழவி குழந்தை வயிற்றை பிடித்து அமுக்கினாள். 'சதக்'கென்று மாவுக்கட்டி வாய்வழி வந்து கீழே விழுந்தது. அப்படியே குழந்தையைப் படுக்க வைத்து முகத்தில் தண்ணீர் தெளித்தான்.

தண்ணீர் பட்டதும் முகத்தைச் சுளித்துக் கண்களைத் திறந்து பார்த்தது குழந்தை.

ஒரு பெண் திடீரென்று எழுந்து ஆ.... ஊ..... என்று கூப்பாடு போட்டு தங்கு தங்கு என்று குதித்து ஆட ஆரம்பித்தாள்.

"குழந்தை பொழைச்சிக்கிடிச்சி" கூட்டம் 'ஹோ' என சத்தமிட்டது.

"சரி நேரமாச்சு. பூஜை ஆரம்பமாகட்டும். சாப்பாடு போடலாம், எல்லாரும் வழிவிட்டு கோயிலுக்குப் போங்க" என்றார் ஒருவர்.

பெரியவர் ஓடி வந்து நீலனைக் கட்டியணைத்துக் கொண்டார்.

நாற்பது நாட்கள் ஒலித்த மணி!




ஆஸ்திரேலியா, நியூகினி, இந்தோனேஷியா நாடுகளிலுள்ள காடுகளில் ஒரு வகை விசிறிக் கழுத்து ஓணான்கள் வசிக்கின்றன. ஆபத்து சமயங்களில் எதிரிகளைப் பயமுறுத்துவதற்காக இந்த வகையான ஓணான் ஓசையை எழுப்பும். உடலைச் சிலிர்க்கும். அப்போது கழுத்துப் பகுதியிலுள்ள தசைமடிப்புகள் விரிந்து வட்ட வடிவில் ஒரு கேடயம் போல



காட்சியளிக்கும். அந்த நிலையிலேயே தன் வாயைப் பிளந்தபடி ஓசை எழுப்பியவாறு கால்களை மாற்றி, மாற்றி வைத்து ஆடும். அதனால் இதை 'நடனமாடும் ஓணான்' என்றும் அழைக்கின்றனர்.

– க. பூங்கொடி, சித்தோடு.

காண்டா மிருகங்கள் பொதுவாக பழுப்பு நிறத்தில் காணப்படும். ஆனால் வெள்ளை நிறக் காண்டாமிருகம் ஒரு காலத்தில் இருந்தது என்று கூறினால் நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். இப்போது வெள்ளை நிறக் காண்டாமிருகம் முழுவதும் இல்லை என்றே கூறலாம். இந்த வெள்ளைக் காண்டாமிருகத்தின் எடை மூன்றரை டன்கள். கொம்பின் நீளம் மொத்தம் ஐந்து அடி.



– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்


ஆப்பிரிக்க பழங்குடியினரில் 'வொரி' என்றொரு இனத்தினரின் திருமணத்தின் போது, மணப்பெண் வாழை இலையினால் தலையைப் போர்த்திக் கொள்வது வழக்கம்.

1896–ஆம் ஆண்டு ஜனவரி 5–ஆம் நாளன்று அமெரிக்காவிலிருந்து வெளியான ஒரு



பத்திரிகைதான் உலகிலேயே முதன் முதலில் சித்திரக் கதையை வெளியிட்டது.

1155–ஆம் ஆண்டிலேயே சீனாவில் தேசப்படம் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு வெளியானது. இதற்குப் பிறகு முந்நூறு ஆண்டுகள் கழித்துதான் ஐரோப்பாவில்




முதல் உலக வரைபடம் அச்சடிக்கப்பட்டது.

– எஸ். லாவண்யா,
சீர்காழி.

மிக மிக உயர்ந்த ரக வைரத்தை சுத்தமான தண்ணீரில் போட்டால் அப்படி ஒரு வைரக் கல் தண்ணீரில் இருப்பதே தெரியக் கூடாது. அப்படி இருந்தால்தான் உயர் ரக வைரம் என்று அர்த்தம். இதைத்தான் 'Diamond of the first water' என்று சொல்கிறார்கள்.

பனிப் பிரதேசமான அண்டார்டிகா கண்டத்திலிருந்து 40 கி.மீ. அகலமும், 158 கி.மீ. நீளமும் உள்ள ஒரு பனிப் பாறை விடுபட்டு ரூாஸ் சமுத்திரத்தில் மிதந்து




கொண்டு இருக்கிறது. இதுதான் மிகப் பெரிய பனிப்பாறை. இந்தப் பனிப் பாறை உருகினால் லாஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு 675 ஆண்டுகளுக்கு உபயோகத்திற்குத் தேவையான நீர் கிடைக்குமாம்.

ஆர். சுமதி, நாமகிரிப்பேட்டை.


பிராணிகளில் பச்சோந்தி மட்டுமே நிறம் மாறும் தன்மை உடையது என்று நம்பினால் அது தவறான எண்ணமாகும். பல கைகளை உடைய ஆக்டோபஸ் என்ற கடல் பிராணியாலும் தனது நிறத்தை மாற்றிக் கொள்ள முடியும். இந்தப் பிராணியின் கடினத் தோலில் பல வண்ணங்களைக் கொண்ட பைகள் உள்ளன. இந்த வண்ணங்களைத் தேவையான சமயங்களில் தனது நரம்புகளின் மூலம் உடலில் பல பகுதிகளுக்கும் அனுப்பி சிவப்பாகவோ, நீலநிறமாகவோ, பழுப்பு, பிரௌன் வண்ணங்களிலோ தன் உடலை மாற்றிக் கொள்கிறது.


கடல்வாழ் பிராணிகளான சீல்கள் மந்தை மந்தையாகத் திரியும். ஒவ்வொரு மந்தைக்கும் தனிப் பாஷை உண்டு. கர்ஜிப்பது, கத்துவது இவற்றின் மூலம் அவை செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன. ஒரு மந்தையிலிருந்து இன்னொரு மந்தைக்குச் சீல்கள் வந்து சேர்ந்தால் அவற்றிற்குப் புது மந்தையின் பாஷை புரியாதாம். ஆனால் தங்களது பாஷையை சீல்கள் புது சீலுக்கு மிக விரைவில் கற்றுத் தந்து விடுகின்றனவாம்!

–ஏ. கே. நாசர், லெட்சுமாங்குடி.



ஆயிரம் சிப்பிகள் இருக்கும் இடத்தில் ஒரு இடம் புரிச்





அடைந்ததிலிருந்து நாற்பது நாட்கள் இடைவிடாமல் ஆலய மணிகள் தொடர்ந்து அடிக்கப்பட்டன!


– பெ. நடராஜன், எட்டாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.

முதன் முதலாகச் சாலைப் போக்கு வரத்தை ஒழுங்குபடுத்த சிக்னல் முறை 1868ஆம் ஆண்டுதான் அறிமுகமாகியது. அப்போது சிவப்பு, பச்சை என்னும் இரு நிறங்கள்தாம் இருந்தன. கியாஸ் விளக்குகளே இதற்குப் பயன் படுத்தப்பட்டன. முதலில் சிக்னல் நிறுவப்பட்ட இடம், லண்டன் பார்லிமெண்ட் கட்டடத்திற்கு அருகேயுள்ள சந்திப்பாகும். ஆனால் நிறுவப்பட்ட சில நாட்களிலேயே அந்த விளக்கு வெடித்து ஒரு காவலரைக் கொன்றது. எனவே, சிக்னல் முறை நிறுத்தப்பட்டது. தொடர்ந்து செய்யப்பட்ட ஆய்வின் பயனாக, 1914 ஆம் ஆண்டு அமெரிக்காவில் தற்போது புழக்கத்திலிருக்கும் மூவண்ண விளக்குகள் கொண்ட சிக்னல் அமைக்கப்பட்டது.

– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

சங்கும், ஆயிரம் இடம்புரி சங்கு இருக்கும் இடத்தில் ஒரு வலம்புரிச் சங்கும், ஆயிரம் வலம்புரிச்சங்கு இருக்கும் இடத்தில் ஒரு சலஞ்சலமும், ஆயிரம் சலஞ்சலம் இருக்கும் இடத்தில் ஒரு பாஞ்சசன்யமும் இருக்கும் என்று கடல் ஆராய்ச்சி நூல்கள் தெரிவிக்கின்றன. பாஞ்சசன்யம் என்பது பகவான் கிருஷ்ணரின் கையிலிருக்கும் சங்கு ஆகும். குருக்ஷேத்ர போரில் கிருஷ்ணர் ஊதியது இந்த பாஞ்சசன்யம் சங்கைத்தான்!

பிரான்ஸ் நாட்டின் பதினைந்தாம் லூயி என்ற மன்னரின் மரணத்திற்கு வித்தியாசமான முறையில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அதாவது அவர் மரணம்



முதன் முதலில் இத்தாலியில்தான் 13ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஒரு சுவர்க் கடிகாரத்தைக் கண்டுபிடித்தனர். அதன் பின்பு 1362ல் ஜெர்மனியைச் சார்ந்த ஹென்றி டிவிக் என்பவர், ஃபிரான்ஸ் நாட்டில் அந்நாளில் அரசாண்டு வந்த ஐந்தாம் சார்லஸ் சக்கரவர்த்திக்காக மணியடிக்கக்கூடிய பெரியதொரு கடிகாரத்தைச் செய்தார். அது 'பைலே-டி-ஜஸ்டிஸ்' எனப் பெயர் கொண்ட அவரது மாளிகைக் கோபுரத்தில் மாட்டப்பட்டது.

– பாளை பகம்பொன, திருநெல்வேலி.

பறக்கும் பூச்சிகளின் வேகத்தை கணக்கெடுத்து இருக்கிறார்கள். மணிக்கு ஈ - 5 மைல், வண்ணத்துப்பூச்சி – 12 மைல், குளவி – 12 மைல், மலைக்குளவி – 13 மைல், தேனீ – 12 மைல், குதிரை ஈ – 25 மைல், ஆப்பிரிக்காவில் உள்ள விட்டில் பூச்சி – 25 மைல் வேகத்தில் செல்கின்றன.

– வி. விஜயலட்சுமி, தென் எலப்பாக்கம்.



தாயால் உருவான விஞ்ஞானி!



"தம்பி..." என்று உரக்க அழைத்த தாய்; "எங்கே இருக்கிறாய்? உடனே இங்கு வா..." என்றாள்.

"இதோ... தோட்டத்தில் அம்மா..." என்ற மகன், "இதோ வந்தேன்..." என்றானே தவிர, இருந்த இடத்தை விட்டு எழுந்து வருபவனாக இல்லை.

எனவே, அவன் தாய் கிளம்பித் தோட்டத்துக்கே வந்து விட்டாள். அங்கு, அவன் எதையோ பிழிந்து, ஒரு கிண்ணத்தில் சாறு எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"கையில் என்ன...? சப்பாத்திக் கள்ளிப் பழமா...?" என்று பதறிய அவள், "ஐயோ... டேய்... டேய்... அதில் முள் இருக்குமடா... அதை ஏன் பிழிகிறாய்? எதற்கு அந்தச் சாறு...?" என்று வினவினாள்.

"அம்மா... நான் இந்தச் சாறிலிருந்து வண்ணமை தயாரிக்கப் போகிறேன்.. அதில் என் பேனாவைத் தோய்த்து எழுதப் போகிறேன்..." என்று உற்சாகமாகக் கூவினான் சிறுவன்.

"எதற்காக இந்த வேலையற்ற வேலை...? காசு கொடுத்தால் கடையில் மை கிடைக்கும் போது, அதை வாங்கிப் பயன்படுத்தாமல் ஏன் இப்படி சிரமப்படுகிறாய்...?" என்றாள் தாய்.

"அது எப்படி அம்மா...? எனக்குப் பேனா மை செய்யத் தெரியும். அந்தத் திறமையை வீணடிப்பானேன்...? தவிரவும், நமது தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்ளலாமே...! அதில் என்ன தவறு...?" என்ற சிறுவன், தன் வேலையில் தொடர்ந்து ஈடுபடலானான்.

அச் சிறுவன், 'தன் கையே தனக்குதவி' என்று வாழ்பவன். அடுத்தவர் உழைப்பில் காலம் தள்ளுவது அவனுக்குப் பிடிக்காத ஒன்று. அது மட்டுமல்ல... எந்தச் செயலையும், அவன் முழு ஈடுபாட்டோடு தான் செய்வான். அதே போல, எதைப் பார்த்தாலும் அதை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துப் பார்த்து விடுவது, அவனது குணம்.

அவ்விதம் பார்ப்பதன் மூலம், அந்தப் பொருளைப் பற்றிய முழுமையான அறிவை அவனால் பெற முடிந்தது. மேலும், அதை இன்னும் எப்படியெல்லாம் வேறு வடிவத்தில், இன்னும் சிறப்பாக உருவாக்கலாம் என்பது பற்றியும் அவன் சிந்திப்பான். மெல்ல மெல்ல அச் சிந்த

ஜானகிமணாளன்

னைக்குச் செயல் வடிவம் கொடுப்பான்.

"சரி அம்மா...! எதற்காக என்னை அழைத்தீர்கள்...?"

"பிரார்த்தனை நேரம் நெருங்கி விட்டதை நீ கவனிக்கவில்லையா...?" என்றாள் தாய்.

''ஆம் அம்மா.... இதோ வந்து விட்டேன்..." என்றவாறு, அவன் எழுந்து உள்ளே சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டான்.

அவன் தாயாருக்குச் சமயப் பற்று அதிகம். மகனையும் அவ்வாறே வளர்த்தாள். அவனுக்குத் தானே விவிலிய நூலைக் கற்பித்தாள். அவள் ஒரு சிறந்த பாடகியும் கூட. எனவே, அவள் அவனுக்குப் 'பியானோ' வாசிக்கக் கற்பித்தாள். அவளுக்கு இன்னொரு மூத்த மகனும் இருந்தான். அவன் நன்றாக வயலின் வாசிப்பான். மூவரும் சேர்ந்து இசை நிகழ்ச்சியை நடத்தி விடுவார்கள்.

அந்த அம்மையாருக்கு அடிக்கடி

அவன் முழு ஈடுபாட்டோடுதான் செய்வான். அதே போல, எதைப் பார்த்தாலும் அதை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப் பார்த்து விடுவது, அவனது குணம்.

உடல்நலக் குறைவு ஏற்பட்டு விடும். அவள் அடிக்கடி 'பிளாரன்சு'க்குப் போய் விடுவாள். அது அவளது சொந்த ஊர். அப்போதெல்லாம், அவள், அச் சிறுவனையும் தன்னுடன் அழைத்துப் போய் விடுவாள். ஆகவே, அவனது முறையான பள்ளிப் படிப்பு மிகவும் பாதிக்கப்பட்டது.

என்றாலும் கூட, அச் சிறுவனின் படிப்பார்வம் குன்றிவிடவில்லை. அவன் தாய் அவனுக்கு நிறையப் புத்தகங்களை வாங்கித் தருவாள். குறிப்பாகப் பெளதீகம் மற்றும் மின்சாரம் தொடர்பான கட்டுரை நூல்களை அவன் வாங்கிப் படிப்பான்.

அச் சமயத்தில், தாமஸ் ஆல்வா எடிசன் என்ற விஞ்ஞானி மிகவும் பிரபலம் பெற்று விளங்கினார். அவரது கண்டுபிடிப்புகள் மீது அவன் மிகுந்த அக்கறை காட்டினான். அவனது அறிவியல் ஞானம் வளர்ந்தது. அவனிடம், தானும், 'ஏதாவது அறிவியல் சாதனை புரிய வேண்டும்; அதன் மூலம் புகழ்பெற வேண்டும் என்ற ஊக்கம் ஏற்பட்டது. அந்த ஊக்கத்துக்கு, அவன் தாய் மிகுந்த உறுதுணையாக நின்றாள்.

அவள் வீட்டிலேயே, மாடியின் ஒரு பகுதியைத் தடுத்து, அச் சிறுவனுக்கு ஒரு தனி அறையை அமைத்துக் கொடுத்தாள். அவன் அதைத் தனது ஆராய்ச்சி சாலையாகப் பயன்படுத்தினான்.

ஒரு தந்தியடிக்கும் கருவியும், வேறு பல மின்சாரச் சாதனங்களும் அவள் வாங்கிக் கொடுத்தாள். அவற்றைக் கொண்டு, அச் சிறுவன் பலவிதப் புதுப்புது முயற்சிகளில்



ஈடுபட்டு ஆய்வுகளைச் செய்யலானான்.

அவனது விடா முயற்சிகளைக் கண்டு, அவன் தாய் பூரித்தாள். ஆனால், அவன் தந்தைக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. தன் மகன், தேவையற்ற வேலைகளில் ஈடுபட்டு, நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதாகவே, அவர் கருதினார் என்ற போதிலும், வெளிப்படையாக எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆகவே, அவரது மௌனத்தை அச் சிறுவன் அவரது அங்கீகாரமாகவே கருதிக் கொண்டான். அதுவே அவனுக்கு மேலும் ஊக்கத்தைத் தந்தது.

அவன் தந்தைக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. தன் மகன், தேவையற்ற வேலைகளில் ஈடுபட்டு, நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதாகவே, அவர் கருதினார்.


நாட்கள் நகர்ந்தன. அந்த இளம் விஞ்ஞானியின் வயதும் கூடியது. கூடவே அவரது ஆராய்ச்சிகளும் விரிவடைந்தன. வீட்டின் மாடியறையில் இடம் போதவில்லை. ஆகவே, ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் அவர் ஒரு விடுதி அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார். அங்கு அவருடைய ஆராய்ச்சிகள் தொடர்ந்தன.

'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்பார்கள் அல்லவா? அதற்கு ஏற்ப, ஒருநாள், கடையிலிருந்து ஏதோ சாமான் கட்டி வந்த பொட்டலத் தாள் ஒன்றை எடுத்து அவர் படித்தார். அத் தாளில் ஒரு கட்டுரை அச்சாகியிருந்தது. அதில் கூறப்பட்டிருந்த அறிவியல் செய்தி ஒன்று, அவரைக் கவர்ந்தது.

'ஒலி ஈர்ப்பு அலைகளும் விண்வெளியில் பரவித்தானே கிடக்க வேண்டும்? ஒளிக்கதிர் அலைகள் நம் கண்களைக் கூசச் செய்கின்றன. வெப்ப அலைகள் சூட்டைத் தருகின்றன. ஆனால், ஒலி ஈர்ப்பு அலைகள் அப்படிப்பட்ட கூச்சம் அல்லது வெப்பத்தை ஏற்படுத்துவதில்லை...' – இதுதான் அக் கட்டுரையின் சாராம்சம். அதை 'என்ரிட்ச்' என்பவர் எழுதியிருந்தார். அவர் ஜெர்மன் நாட்டு விஞ்ஞானி.

கட்டுரையின் செய்தி பற்றி, அவர் திரும்பத் திரும்பச் சிந்தித்தார். – 'விண்வெளியில் பரவிக் கிடக்கும் அந்த ஏதோவொரு ஒலி ஈர்ப்பு அலைகள் மூலம், நாம் ஏன் எல்லா ஒலிகளையும் – அதாவது செய்திகளை அனுப்பிப் பார்க்கக் கூடாது...?'

உடனே, அவர் அது பற்றிய தீவிர ஆய்வில் ஈடுபடலானார். அதற்கு, அவர் ஏற்கெனவே பயன்படுத்திப் பார்த்திருந்த, தந்தி அனுப்பும் கருவி மிகவும் பயன்பட்டது. அதன் வழியாகத் தந்தியை அனுப்புவதைப் போல், வேறு ஒலிகளையும் ஏன் அனுப்பக் கூடாது? அதற்கு நாம் ஏன் மின்காந்த அலைகளையும் பயன்படுத்தக் கூடாது...? இப்படி நினைத்த அவர், மின்காந்த அலைகள் பற்றிய ஆய்வில் ஈடுபடலானார். அந்த ஆய்வின் மூலம் 'மின்விசைப் பொறி' ஒன்றை உருவாக்கும் முறை



யில் வெற்றியும் பெற்றார். பிறகு, தந்தி அனுப்பும் முறை, மின்விசைப்பொறி இரண்டையும் இணைத்துக் கம்பி இல்லாமல் செய்திகளை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார். ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது.

பிற்பாடு, பேச்சுக் குரல் எட்டாத தூரத்தில், தன் அண்ணனைத் தமது ஒலி ஈர்ப்புக் கருவியுடன் நிற்கச் செய்தார். அவர் இங்கிருந்து ஒரு கருவி மூலம் ஒலியை அனுப்பினார். அவ்வொலி அவர் அண்ணனின் காதில் விழுந்தது - இவ்வாறு, அவருடைய முதல் சாதனையில் வெற்றி!

அடுத்தபடியாக, உயரமான ஒரு குன்றுக்கு இந்தப் பக்கம் அவரும் அந்தப் பக்கம் அண்ணனும் மறைவாக நின்று கொண்டனர். இவர் செய்தியை அனுப்பினார். அண்ணனுக்கு அவ்வொலி கேட்டது. அதற்கு அடையாளமாக அவர் துப்பாக்கியை வெடித்து ஒலி எழுப்பி அதை உறுதிப்படுத்தினார். இவ்வாறு, கம்பித் தொடர்பு இன்றித் தந்தி அனுப்பும் அவரது முயற்சி வெற்றி பெற்றது.

அவர் தனது கண்டுபிடிப்பை முதன் முதலில் தன் தாயாருக்குத்தான் செய்து காட்டினார். ஏனெனில் அவரது முயற்சிகளுக்கு ஊக்கமளித்துப் பின்பலமாக இருந்தவர் அவர்தானே! தந்தையும் உடன் இருந்தார். இருவரும் மகிழ்ந்தனர். போற்றிப் பாராட்டினர்.

பிறகு, அவர் அக்கருவியை அனைவருக்கும் பயன்படும் விதம், இத்தாலி அரசிடம் கொடுக்க விரும்பினார். ஆனால், அவர்களுக்கு இவரது திறமை மீது நம்பிக்கை ஏற்படவில்லை. எனவே, ஆதரவு கிட்டவில்லை.

ஆகவே, அவர் இங்கிலாந்து சென்றார். அங்கு லண்டன் நகர அஞ்சல் பொறியாளர் ஒருவரின் ஒத்துழைப்புடன், தன் கருவியைச் செயல்படுத்திக் காட்டினார். பலரும் புகழ்ந்தனர். நல்லாதரவு கிட்டியது. அவரது பேரும் புகழும் உயர்ந்தன.

அதுபற்றிக் கேள்விப்பட்ட இத்தாலி நாடு, அவருக்கு அழைப்பு விடுத்தது. அதை ஏற்று, அவர் நாடு திரும்பினார். மாபெரும் வரவேற்பு! மக்கள் அதிசயித்தனர். அரசு அவரைப் பெருமைப்படுத்தியது. அவரது புகழும் பெருமையும் இன்னும் பல நாடுகளுக்குப் பரவின. அவரது சாதனை பற்றி அறிந்த தாமஸ் ஆல்வா எடிசனும், அவருக்கு ஒரு பாராட்டுக் கடிதம் அனுப்பினார். அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

அந்தக் கண்டுபிடிப்பை அவர் நிகழ்த்திய போது, அவருக்கு வயது 27தான். அதைத் தொடர்ந்து அவர் வானொலியையும் கண்டுபிடித்தார். இன்றைக்குப் பெரிதும் பயன்பட்டு வரும் தொலைக்காட்சி, செயற்கைக்கோள் வழித் தகவல் பரிமாற்றம் போன்ற இன்னும் பல்வேறு நவீனக் கண்டுபிடிப்புகளுக்கு எல்லாம் அடிப்படையாக இருந்தது, அவர் கண்டுபிடித்த கம்பியில்லாத் தந்தியும் வானொலியுமே ஆகும்!

அந்த விஞ்ஞானி யார் தெரியுமா? அவர்தான் மார்கோனி. அவரது பிறப்பு 1874. இடம் இத்தாலியின் போலோனா. அவரது மறைவு 1937.

அவரது உயரிய கண்டுபிடிப்புக்காக, 'நோபல் பரிசு' வழங்கப்பட்டது. இத்தாலி நாடு, 'மார்க்விஸ்' என்ற பட்டத்தையும், இங்கிலாந்து 'நைட்' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தன.




''எந்தக் குருவியாவது பணம் சேர்க்குமாடா?''

''சேர்க்காது!''

''பின்னே எங்க அப்பா அடிக்கடி 'குருவிமாதிரி சேர்த்த பணம்'னு சொல்றாரே!'''

– தஞ்சை தாமு

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. நேரத்தைக் காட்டும் கருவி (5)
4. காற்று (2)
6. சகோதரி (3)
11. பாத்திரத்தை இப்படியும் அழைப்பார்கள் (3)

வலமிருந்து இடம்


3. சொந்தமில்லாத வீடு, பொருள் முதலியவற்றைப் பயன்படுத்த குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவது (3)
9. ஜாதி, மத, இன ______ இல்லாதது உலகிற்கு நல்லது (3)
10. பாதம் (2)
14. கணவாய் மீன் (5)

மேலிருந்து கீழ்

1. பாரதிக்கு இது என்றால் வேப்பங்காய் போல் கசக்கும் (4)
2. இதுக்குக் கையில்லை; கால் இல்லை. ஆனால் விரல் உண்டு (4).
3. தொடர்ந்து மாறுதல் இல்லாமல் நடைபெறுவது (4)
7. உலகத்தைப் பார்க்க வைக்கும் உறுப்பு (2)
9. வஞ்சகத் திட்டம் (2)

கீழிருந்து மேல்

5. தனக்கென நிலையான வடிவம் இல்லாத பொருள் (4)
6. உடல் உறுப்புகளின் அசைவுக்குத் தேவையாக இருக்கும் சுருங்கி விரியும் தன்மை கொண்ட திசுத் தொகுப்பு (2)
8. லீ ______ என்ற சீனத் தலைவர் அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்தார் (2)
11. கம்பீர நடை (4)
12. இலக்கம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
13. ஜப்பானின் தலைநகரம் (4)
14. தாவரங்கள் உயிர் வாழத் தேவையான முக்கிய உறுப்பு (4)



— வி. எழில்மதி,
தெற்கு
உடையார்பாளையம்,
ஆத்தூர், சேலம்
மாவட்டம்.

விடை: 48 ம் பக்கம்


கோகுலம்
போஸ்டர்



SINGER

எங்கள் ஊரில் நடந்தது

கோடி வாங்கப்

கிழிந்த நோட்டு

ஒரு நாள் நானும் எனது நண்பர்களும் பள்ளிக்குச் செல்வதற்காகப் பேருந்தில் ஏறி பயணம் செய்து கொண்டிருந்தோம். நடத்துனர் அனைவரிடமும் டிக்கெட் கொடுத்துவிட்டு எங்களிடம் வந்தார். டிக்கெட்டை எடுத்துக் கிழித்துக் கொடுத்தார். என் நண்பன் ஒரு கிழிந்த 5 ரூபாய் நோட்டைக் கொடுத்தான். உடனே நடத்துனர் "நோட்டு கிழிஞ்சிருக்கு, செல்



லாது என்றார். என் நண்பன் "நீங்க கொடுக்கும் டிக்கெட் கிழிஞ்சிருக்கும் போது நான் கொடுக்கும் நோட்டு கிழியக் கூடாதா?" என்று கேட்டான். நடத்துனர், "இது கிழிஞ்சா பயணம் முடியும் வரையாவது செல்லுபடியாகும்; அது கிழிஞ்சா எப்பவுமே செல்லாதே" என்று திரும்பக் கேட்டு மடக்க, என் நண்பன் வாயடைத்துப் போனான்.

- ப. ரவிச்சந்திரன், பதினோராம் வகுப்பு 'அ' பிரிவு, அறிஞர் அண்ணா அரசு மேநிலைப் பள்ளி, அதியமான் கோட்டை.

சிக்கனம்

நேரச் சிக்கனத்தைப் பற்றி தம்பிக்கு அம்மா சொல்லிக் கொடுத்தார். சில செயல்களைத் திட்டமிட்டுத் தொடர்ச்சியாகச் செய்தால் நேரத்தை மிச்சப்படுத்தலாம் என்று சொன்னார். தம்பி அம்மாவிடம், "சாப்பிடப் போகும்போது ஒரு முறை கைகழுவுமிடத்திற்குச் சென்று கை




கழுவ வேண்டியதிருக்கிறது. நேரத்தைச் சிக்கனப்படுத்த சாப்பிடுவதற்கு முன்பு இரண்டுமுறை கை கழுவிவிட்டால் சாப்பிட்டபிறகு கை கழுவ வேண்டிய நேரம் மிச்சம்தானே" என்று கேட்க அனைவரும் சிரித்துவிட்டோம்.

- அ.பேச்சியப்பன், ராஜபாளையம்.

மழை

நானும் என் தங்கையும் அத்தை வீட்டுக்குச் சென்றிருந்தோம். அத்தை சன் டீ.வியில் நியூஸ் பார்த்துக் கொண்டே, சமையலையும் கவனித்துக் கொண்டிருந்தார். என் தங்கை எதற்கோ பிடிவாதம் பிடித்து அழ ஆரம்பிக்க, என் அத்தை "சத்தம் போடாம நியூஸ் பாரு. நியூஸ்ல இன்னிக்கு மழை வருமா, வராதான்னு சொல்வாங்க, கேட்கணும்" என்று கூறிவிட்டுச் சமையலறைக்குச் சென்றுவிட்டார். அப்போது விளம்பர இடைவேளை வரவே, 'கோடீஸ்வரன் பண மழை' என அறிவிப்பாளர் கூற என்



போறேன்!




தங்கை "அத்தை மழை பற்றி சொல்றாங்க பாரு, வா சீக்கிரம்" என்றாளே பார்க்கலாம்! நானும் அத்தையும் சிரித்து விட்டோம்.

- ப. அஷோக், பதினோராம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி, மடிப்பாக்கம், சென்னை - 91

ரோஜா

எங்கள் வீட்டின் வழியாக பூக்காரர் ஒருவர் "ரோஜா, முல்லை, கனகாம்பரம்"



எனக் கூவிக் கொண்டு சென்றார். நான் என் தம்பியை ஒரு ரோஜாப்பூ வாங்கி வரச் சொன்னேன். அதற்கு அவன் "அவர் தான் ரோஜா இல்லைன்னு சொல்றாரே, கனகாம்பரம் வாங்கட்டுமா?" என்று கேட்டான். உடனே நான் "அவர் ரோஜா இல்லைன்னு சொல்லலை. ரோஜா முல்லைன்னுதான் சொன்னார்". என்றேன். உடனே அவன் "அப்படி சொன்னாலாவது பூ வேண்டாம்னு சொல்லுவியாக்கும்ன்னு பார்த்தேன்" என்றான் சிரித்தபடி.

- த. மலையரசி, எட்டாம் வகுப்பு, நாகப்பா மருதப்பா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்.

படிப்பு

என் தங்கை சபிதா எப்போதும் துடுக்காகப் பேசக் கூடியவள். ஒரு நாள் பக்கத்து வீட்டுக்கு விருந்தினர் வந்திருந்தார்கள். அவர்கள் வாசலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அங்கிருந்த ஒரு சிறுவனிடம் தங்கை பெயர், வகுப்பு கேட்டாள். அவன் "மூணாவது படிக்கிறேன் நீ?" என்று கேட்டான். "+2 படிக்கிறேன்" என்றாள் சபிதா. விருந்தினர்கள் திகைத்தனர். அவர்களில் ஒருவர் "ரொம்பச் சின்னப் பெண்ணாக இருக்கியே, எப்படி +2 படிப்பே?" என்றார். "நான் அவன் படிக்கிற 3வதுடன் +2 சேர்க்கச் சொன்னேன். அதாவது ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன்" என்றாளே பார்க்கலாம்! அனைவரும் சிரித்து விட்டனர்.

- க. விக்னேஷ், தூத்துக்குடி.

கோடி!

அது பொங்கல் நேரம். வாசலில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டுப் பாட்டி எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தார். நான் அவரிடம் "எங்கே போறீங்க?" என்று கேட்டேன். "கோடி வாங்கப் போறேன்" என்றார். "கோடியா? யார் கொடுக்கறாங்க?" என்றேன் வியப்புடன். "கலெக்டர் ஆபீஸ் பக்கத்துல தர்றாங்க." என்றபடி நடக்க ஆரம்பித்தார். "பாட்டி எனக்கும் ஒரு கோடி வாங்கித் தாங்க" என்றேன். "உனக்கெல்லாம் தரமாட்டாங்க. எனக்கு யாருமில்லை. அதான் தர்றாங்க. பொங்கலுக்கு உடுத்தணும்" என்றார். "உடுத்தணுமா, அப்ப கோடி?" என்றேன் புரியாமல். "புதுச் சேலைய வாங்கி உடுத்தணும். கோடின்னா புதுசுன்னு அர்த்தம்" என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

- சிவ பெருமான், இரணியல், குமரி மாவட்டம்.



1. பெயர் தந்த பெருமை

அமைந்தகரைப் பகுதியில் அமைந்த அந்த உயர் நிலைப் பள்ளி, கோடை விடுமுறைக்குப்பின் அன்று திறந்தது.

அதனால் மாணவர்கள் அனைவரும் உற்சாகமாகப் பள்ளிக்கு வந்திருந்தார்கள்.

அரசுத் தேர்வில் நூறு சதவிகிதம் வெற்றி பெற்ற பள்ளிகள் என்று சொல் வார்களே, அதுபோல இந்தப் பள்ளிக்கு அரசுத் தேர்விலும் நூறு சதவிகிதம் வெற்றி. பள்ளி நடத்தும் ஆண்டுத் தேர்வி லும் நூறு சதவிகிதம் வெற்றி.

அதனால்தான் அந்தப் பள்ளியில் தம் பிள்ளைகளைச் சேர்த்துவிடப் பெற் றோர் விரும்புகிறார்கள். பிள்ளைகளும் அதையே விரும்புகிறார்கள்.

நீண்ட விடுமுறைக்குப் பின் மீண்டும் தம் நண்பர்களைச் சந்தித்த மாணவர்கள், கை குலுக்கியும் கட்டித் தழுவியும், தட்டிக் கொடுத்தும் தம் மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர். விடுமுறை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

எல்லாம் பள்ளி மணி அடிக்கும் வரை தான். பின்பு அமைதி. அவசியமான ஒலி யைத் தவிர, வேறு ஒலியே இல்லை என்று சொல்லலாம்.

வழிபாட்டுக் கூட்டம், தலைமையாசிரி யரின் வரவேற்பு, வாழ்த்து, அறிவுரை ஆகி யன முடிந்து மாணவர்கள் வகுப்புக்குத் திரும்பினர். வகுப்புகள் தொடங்கின.

அது ஒன்பதாம் வகுப்பு. முதல் பாட வேளை. தமிழ் பாட வேளை. தமிழ் ஐயா தாமோ தரனார் வகுப்பில்



இருந்தார்.

மாணவர்களின் வருகையைப் பதிவு செய்தார்.

பின்பு மாணவர்களை நோக்கி பேச ஆரம்பித்தார்:

"மாணவர்களே, ஒன்பதாம் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்று வந்திருக்கிறீர்கள். நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும். அன்றையப் பாடங்களை அன்றே படிக்க வேண்டும். எல்லாத் தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண் பெற வேண்டும். பெற்று, அடுத்த வகுப்புக்குத் தேர்ச்சி பெற வேண்டும் என்றெல்லாம் நான் சொல்லப் போவதில்லை. படிப்பதுதானே உங்கள் கடமை. இது நல்ல பள்ளிக் கூடம். இதில் தொடர்ந்து படித்து வரும் நீங்கள் கடமையுணர்ந்து கற்பீர்கள் என்பதும், சிறப்பான முறையில் தேர்ச்சி பெறுவீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். சென்ற ஆண்டைப் போல நீங்கள் இந்த ஆண்டும் தேர்ச்சி பெறுவீர்கள்.

"நான் உங்களுக்கு இந்த முதல் வகுப்பில் சொல்ல விரும்புவது வேறொன்று. நீங்கள் சாதாரண மாணவர்களாகப் படித்துத் தேர்ச்சி பெறுவது போதாது. சாதனை மாணவர்களாக உயர்ச்சி பெற வேண்டும். பொதுத் தேர்வில் பள்ளியில் முதல், மாநகரத்தில் முதல், மாவட்டத்தில் முதல் என்றெல்லாம் நம் மாணவர்கள் சாதனை செய்வது ஆண்டுதோறும் நடப்பதுதான். அதையும் மீறி ஒரு சாதனை செய்ய வேண்டும்! செய்து, நமது நாட்டுச் சரித்திரத்தில் அல்லது நகரச் சரித்திரத்தில் அல்லது பள்ளியின் சரித்திரத்தில் இடம் பிடிக்க வேண்டும்.

"சாதனை செய்ய, படிப்பைத் தவிர்த்துப் பல தளங்கள் உள்ளன. நூலகத்தில் உலகச் சாதனையாளர்கள் பற்றிய 'கின்னஸ் புக் ஆஃப் வேர்ல்ட் ரிகார்ட்ஸ்' இருக்கிறது. எடுத்துப் பாருங்கள். நூற்றுக்கு மேற்பட்ட களங்கள் இருப்பதைக் காணலாம். ஒவ்வொரு களத்திலும் குறைந்த வயதில் சாதனை செய்தவர்களின் பட்டியலைப் பாருங்கள். அவர்கள் வயதில் உங்களை விடச் சிறியவர்களாகக் கூட இருப்பார்கள். அதனால் ஏதோ ஒரு களத்தைத் தேர்ந்தெடுத்து அதில் சாதனை நாயகராக முயலுங்கள்."

தாமோதரனார் சொல்லிக் கொண்டே, தம் பார்வையால் வகுப்பை அலசினார். அப்போதுதான் முதல்



டாக்டர் பூவண்ணன்

வரிசையில் இருக்கும் மாணவர்களின் பார்வை அறையின் வாயிலுக்குச் செல்வது தெரிந்தது.

தமிழ் ஐயா உடனே வாயிலைப் பார்த்தார்.

அங்கே கையில் ஒரு தாளுடன் பியூன் நிற்பது தெரிந்தது. பியூனுக்கு அருகே மூன்று சிறுவர் நிற்பதும் தெரிந்தது. அவர்கள் தம் பார்வை படுவதற்காக அங்கே காத்திருப்பதை உணர்ந்தார்.

தமிழ் ஐயா, "உள்ளே வாருங்கள்" என்றழைத்தார்.

பியூன் சிறுவர் பின்தொடர உள்ளே நுழைந்தார். கையிலிருந்த தாளை ஆசிரியரிடம் கொடுத்தபடி "ஐயா, இவர்கள் இந்த வகுப்பின் புதிய மாணவர்கள். ஹெச். எம். அனுப்பினார்" என்று கூறினார். தமிழ் ஐயா தாளைப் படித்தார்.

'இந்த வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் மூன்று பேரின் பெற்றோர், வெளியூருக்கு மாற்றப்பட்டார்கள். அதனால் புதிய மாணவர்கள் மூவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.'

தமிழ் ஐயா மூவரையும் பார்த்தார். பின்பு, "புதிய மாணவர்களே, உங்கள் பேரைச் சொல்லுங்கள். சென்னையைத் தவிர வேறு ஊரிலிருந்து வந்திருந்தால் ஊரையும் சொல்லுங்கள்" என்றார்.

முதல் மாணவன் பேசினான்:

"ஐயா, என் பெயர் இளங்கோ. நான் கோயமுத்தூரிலிருந்து வருகிறேன்."

அடுத்தவன், "ஐயா, என் பெயர் அருள்மொழி. நான் தாராகரத்திலிருந்து வருகிறேன்." என்றான்.

மூன்றாம் மாணவன், "ஐயா, என் பெயர் நெடுமாறன். மதுரையிலிருந்து வருகிறேன்" என்றான்.

தமிழ் ஐயாவின் முகத்தில் லேசான புன்னகை.

"இளங்கோ, கோயம்புத்தூர்! அருள்மொழி, தாராகரம்! நெடுமாறன், மதுரை, அருமை! அருமை!"

தமிழாசிரியர் தம்பேரிலும் ஊரிலும் என்ன அருமையைக் கண்டார் என்பது மூவருக்கும் புரியவில்லை.

"கோயமுத்தூர் இளங்கோவே, நீ சேரன். சேரன் தம்பியும் சேரன்தானே? பாரதியும் இளங்கோவைப் பற்றிச் சொல்லும்போது 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று சொன்னார். கோவை சேர நாட்டின் ஒரு பகுதியாய்த் திகழ்ந்ததுதான்.

"தாராகரம் சோழ நாட்டின் திருநகரம். அருள்மொழி என்பது தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இராஜராஜனின் இளமைப் பெயர். அதனால், அருள்மொழி நீ சோழன்.

"பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை. நெடுமாறன், திருஞான சம்பந்தர் காலத்தில் ஆட்சி செய்த பாண்டிய மன்னன். அதனால் நெடுமாறா, நீ பாண்டியன்.

"சேர, சோழ, பாண்டியர் மூவரும் சேர்ந்து வந்திருக்கிறீர்கள்! மூவேந்தரே, வருக, வருக"

தமிழ் ஐயா கூறியதை மற்ற மாணவர்கள் வியப்போடு கேட்க, புதியவர் மூவரும் விவரிக்க முடியாத மகிழ்ச்சியோடு

சாதனை செய்து, நமது நாட்டுச் சரித்திரத்தில் அல்லது நகரச் சரித்திரத்தில் அல்லது பள்ளியின் சரித்திரத்தில் இடம் பிடிக்க வேண்டும்.



"என் நேற்று லீவு?"
"சார், எனக்கு வாய்ப் புண்."
"லீவு போட வாய்ப்புன்னு சொல்லு!"

— கு. கனிமொழி

பார்த்தார்கள்.

கோவையில் எட்டுவரை படித்து, அங்கே ஒட்டி உறவாடிப் பழகிய நண்பர்களை விட்டுவிட்டு, சென்னை வந்ததில் இளங்கோவுக்கு வருத்தம். 'சிறந்த பள்ளியில் சேர்ந்தாலும், இங்கே நாம் அறிந்தவர்கள் இல்லை. எல்லாரும் புதியவர்கள். இங்கே நாம் புதியவனாய் - புத்தம் புது முகமாய் வருகிறோமே' என்று கவலையடைந்திருந்தான் இளங்கோ. அதே கவலையுடன்தான் தமிழ் ஐயா முன்னே நின்றிருந்தான்.

தமிழ் ஐயா, ஊரையும் பேரையும் கேட்டு, புதிதாக வந்த மூவரும் சேர சோழ பாண்டியர் என்று ஒன்றுபடுத்திப் பேசியதும், அருகே இருந்த இருவரும் தமக்கு நெருங்கியவராகிவிட்ட உணர்வு பெற்றான். அந்த உணர்வில் தன்னையறியாமல் இளங்கோவின் வலக்கை மெல்ல நீண்டு, அருகே நின்ற அருள்மொழியின் இடக்கையைத் தொட்டது. இளங்கோ அந்தக் கையைப் பற்றிப் பாசத்தோடு மெல்ல அழுத்தினான்.

அந்த அழுத்தம் என்ன அர்த்தத்தைக் கொடுத்தது என்று தெரியவில்லை. அருள்மொழி தன் வலக்கையால் நெடுமாறனின் இடக்கையை அதே பாசத்தோடு பற்றினான். மூன்று பேரும், ஏதோ மனிதச் சங்கிலி போல கைகளை இணைத்ததைப் பார்த்த தமிழ் ஐயா, "பலே! பலே! மூவேந்தர்கள் தம் ஒற்றுமையை உணர்ந்து கைகோத்து நிற்கிறார்கள்'' என்று கூறினார்.

உடனே இணைந்த கைகள் பிரிந்து விலகின.

அதே சமயம் மூன்றாம் வரிசையில உட்கார்ந்திருந்த மனோகரன், ''உம்... மூவேந்தர் சேர்ந்து வந்து விட்டார்களாம்! மூவேந்தர் தமக்குள் அடித்துக் கொள்வார்களே தவிர ஒற்றுமையாக இருப்பார்களா? இருந்தார்களா?'' என்று அடுத்து அமர்ந்திருந்த நடேசனின் காதைக் கடித்தான்.

அவன் மெதுவாகவே சொன்னாலும், அது தமிழ் ஐயாவின் பாம்புக் காதில் கேட்டுவிட்டது. மனோகரன் என்ன சொன்னான் என்பது தெளிவாகக் கேட்காவிட்டாலும் அவன் ஏதோ, 'கமெண்ட்' அடிக்கிறான் என்பது புரிந்தது.

"யார் அங்கே, பேசுவது?"

தமிழ் ஐயாவின் குரலில் இறுக்கம் தெரிந்தது.

அவர் பார்வை சத்தம் வந்த திசையைப் பார்த்து, மூன்றாம் வரிசையில் படிந்தது.

"மனோகரா, என்ன ஏதோ சொல்கிறாயே?" என்று கேட்டார்.

இளங்கோவின் வலக்கை மெல்ல நீண்டு, அருகே நின்ற அருள்மொழியின் இடக்கையைத் தொட்டது.

மனோகரனை அவருக்குத் தெரியும். பாடம் நடக்கும் போதே இடையிடையே ஏதாவது சொல்லும் பழக்கமுள்ளவன். அதனால் அவன்தான் பேசியிருக்கிறான் என்பதை யூகித்து எழுப்பிவிட்டார்.

மனோகரன் எழுந்து "ஒன்றுமில்லை ஐயா" என்றான்.

மனோகரனுக்கு வாய் துடுக்கு உண்டு. ஆனால் படிப்பில் வல்லமை பெற்றவன். அதிலும் தமிழில் தனித் திறமை பெற்றவன். அவன் ஏதோ சொல்லிவிட்டு மறைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட தமிழ்



"பெரிய முள் 12லயும் சின்ன முள் 3லயும் நிக்குது. இதிலிருந்து உனக்கு என்ன தெரியுது?"

"உங்க வீட்டுக் கடிகாரம் ரிப்பேர்னு தெரியுது!"

- ஏ. குமார்



குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 க	டி	2 கா	ர	ம்		கை	ட	3 வா
ணி		ற்		4 வ	ளி			டி
த		றா		ர		சை		க்
ம்		டி		5 தி		6 த	ங்	கை
	7 க						8 பெ	
டை	ண்	9 ச		ம்		யோ		ர்
ந		தி		ன		கி		வே
று			ள்	10 தா		க்		ணி
11 ஏ	ன	ம்		12 ஸ்	ப	13 டோ	க்	14 ஆ

புதிர் உலக விடைகள்:

II மொத்தம் 15 எலிகள், 8 எலிகள் பிடிக்கப்பட்டன.
15-8 = 7 x 2=14-8=
6 x 2=12-8=4 x 2=8-8=0

III விடை: கவிதை

ஐயா, "பரவாயில்லை! மெதுவாக என்ன சொன்னாயோ, அதைச் சிறிது உறக்கச் சொல்லு" என்றார்.

இப்போது வகுப்பு முழுவதும் மனோகரனைப் பார்த்தது.

"சேர சோழ பாண்டியன் - என்னும் பேரில் ஒற்றுமைன்னு சொன்னீங்க. உண்மையில் மூன்று பேருக்கும் ஒற்றுமை பேரில் மட்டுந்தானே, ஐயா! வாழ்க்கையில் எப்போதும் போரிட்டவர்கள்தானே, இந்த மூவேந்தர்கள்? இதைத்தான் நினைத்தேன். நினைவு பேச்சாகவும் வெளிப்பட்டு விட்டது. ஐயா!" என்றான்.

மனோகரன் சொன்னது தமிழ் ஐயாவின் மனத்தைப் பாதித்தது. சில வினாடிகள் அமைதியாய் அவனைப் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் பேசினார்:

"மனோகரா, நீ சொல்வது உண்மைதான். ஆனால் பாரதியார் சொன்ன ஒரு பொன் வரியைச் சொல்கிறேன். கேட்டுக் கொள். ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர், தம்முள் - சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ? என்று பாரதி சொன்னார். சண்டையிட்டாலும் மூவேந்தர், சகோதரரே!"

தமிழ் ஐயாவின் குரலில் உற்சாகம் குறைந்தது தெரிந்தது.

'மறைந்த உற்சாகத்தை மீண்டும் உண்டாக்கிவிட வேண்டும்' என்று தமிழ் ஐயா நினைத்தார்.

"மூவேந்தர்களே, நான் மாணவர்கள் சாதனை செய்ய வேண்டும். சாதனை நாயகர்களாக வேண்டும் என்று சொன்னேன். நீங்கள் அதைக் கேட்டீர்களா?"

மூவரும் 'கேட்டோம்' என்பதைத் தலையசைப்பின் மூலம் தெரிவித்தனர்.

"சேரன் இளங்கோவே, உனக்குப் பெயரை வழங்கிய இளங்கோ அடிகள் இன்னும் சரித்திரத்தில் நிற்கிறார். இலக்கியத்தில் வாழ்கிறார். காரணம், அவர் செய்த சிலப்பதிகாரம் என்னும் காப்பியம். இளங்கோ, நீ அவரைப் போல இலக்கியத்தில் ஏதாவது செய்வாயா?"

தமிழ் ஐயா கேட்டுவிட்ட பிறகு, 'உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்காத ஒரு பாலகனிடம் இப்படி கேட்கிறோமே! நம் கேள்வி அவனைத் தடுமாறச் செய்யுமே! நாம் செய்வது சரியா?' என்று தம்மை நொந்தபடி இளங்கோவைப் பார்த்தார்.

(தொடரும்)



உங்கள் நூலகம்

வினோபாஜி கடிதத்தைக் கிழித்தது ஏன்?

நெகிழ்ச்சி!

இங்கிலாந்தில் கார்லைலில் பிறந்த ஆங்கிலேயரான ஆண்ட்ரூஸ் காந்தியடிகளின் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அவருடன் தன்னை இணைத்துக் கொண்டு ஓர் இந்தியனாகவே வாழ்ந்தார். தீனபந்து என்று காந்தியடிகளாலேயே அழைக்கப்படும் பெருமையைப் பெற்ற தியாக சீலரின் வாழ்க்கை வரலாறு. படிக்கும்போதே மனம் நெகிழுகிறது.

சி.எப்.ஆண்டரூஸ் - எம்.வி. வெங்கட்ராம் - பக்.62 - ரூ. 15. - பழனியப்பா பிரதர்ஸ், 14 பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

சுவையான நிகழ்ச்சிகள்

நேருஜி ஓட்டி வந்த காரில் ஒரு பசு அடிபட்டுக் காயமடைந்தபோது அவர் என்ன செய்தார் தெரியுமா? காந்தியடிகளின் பேரன்புக்குப் பாத்திரமான வினோபாஜி தனக்குக் காந்தியடிகளிடமிருந்து வந்த கடிதம் ஒன்றைக் கிழித்துப் போட்டதன் காரணத்தை உங்களால் ஊகிக்க முடிகிறதா? இப்படி உலகப்புகழ்பெற்ற பேரறிவாளர்கள் பலரது வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள் இதில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மேடையில் திறமையாகப் பேச வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களுக்கும் சிறந்த முறையில் கட்டுரை எழுத வேண்டும் என்று விழைவோருக்கும் பயனளிக்கக் கூடிய நூல்.

பெரியோர்கள் வாழ்வில் சில சுவையான நிகழ்ச்சிகள் - பாலமுருகன் - பக். 144. - ரூ.30- சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, ராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

குறள் தொண்டு

உலகப் பொது மறையாகவுள்ள திருக்குறளின் 22 குறட்பாக்களுக்குப் பொருத்தமான கதைகளைச் சுவையாகத் தந்து குறள் தொண்டாற்றியுள்ளார் ஆசிரியர். இதில் ராஜா ராணிக்கதைகள், விலங்கு பறவைக் கதைகள், வரலாற்றுக் கதைகள், சமூகக் கதைகளும் உண்டு. இத்தனையும் சேர்ந்து குறட்பாக்களின் பொருளை அழுத்தமாகப் புரிய வைக்கின்றன. அழகூட்டுகின்றன படங்கள்.

குறள் காட்டும் நன்னெறிக் கதைகள் - நல்லசிவம் - பக்.144 - ரூ.27.50. ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

ஆயிரம் வினாக்கள்

பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள பள்ளிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனைத்திலும் வினாடி - வினா நடத்தப்படுகின்றன. இவற்றில் வெற்றிபெற எண்ணற்ற தகவல் நூல்கள் நாள்தோறும் வெளியாகின்றன. இந்த நூலும் அதில் ஒன்று. இதில் ஆயிரம் பொது அறிவு வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் உள்ளன.

சூப்பர் க்விஸ் 1000 - முதல் தொகுதி - அப்பாஸ் மந்திரி - பக்.128 - ரூ.24 - குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ் - பிளாக் நம்பர் எ.எ. 96, பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணா நகர், சென்னை - 600 040.

- ரே

கேட்கட்டுமா டாக்டர்?

● மா. ரவிப்ரகாஷ், வாணியம்பாடி

? புகைபிடித்தால் மாரடைப்பு வருகிறது என்று கூறுகிறார்கள். இது உண்மையா, டாக்டர்?

! உண்மைதான். ரவிப்ரகாஷ்! புகை பிடிக்காதவர்களைவிட புகை பிடிக்கும் பழக்கமுள்ளவர்ளுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு 10 மடங்கு அதிக வாய்ப்புள்ளது. காரணம் சிகரெட் மற்றும் பீடிப் புகையில் 4,000க்கும் மேற்பட்ட நச்சுப் பொருள்கள் உள்ளன. நிகோடின், கார்பன் மோனாக்சைட், அமோனியா, பென்சீன், நைட்ரோபென்சீன், பீனால், ஹைட்ரஜன் சயனைட், டொலூயின், கிரசால் ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

நிகோடின் இரத்தத்தில் உள்ள தட்டணுக்களை ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளச் செய்கிறது. மேலும் அது அட்ரீனல் சுரப்பிகளைத் தூண்டி அட்ரீனலின் மற்றும் நார்அட்ரீனலின் இயக்குநீர்களை அதிகமாகச் சுரக்கச் செய்கிறது. இவை இதயத் துடிப்பையும் இரத்த அழுத்தத்தையும் அதிகரிக்கச் செய்கின்றன. இதனால் இதயத் தசைகளுக்கு அதிக இரத்தம் தேவைப்படுகிறது. ஏற்கனவே இதயத்தமனி இரத்தநாளத்தில் கொழுப்புப் படிந்துள்ளவர்களுக்குக் கொழுப்பின்மீது தட்டணுக்கள் ஒரு கொத்தாக ஒட்டிக்கொள்ள, இரத்த உறைவு ஏற்படுகிறது. அது இரத்த நாளத்தை அடைந்து இதய வலியையோ, மாரடைப்பு நோயையோ ஏற்படுத்துகிறது.

இதயத் தசைகளுக்குத் தேவையான பிராணவாயுவை இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபின் சுமந்து செல்கிறது. ஆனால், புகையில் உள்ள கார்பன் மோனாக்சைட் ஹீமோகுளோபினோடு சேர்ந்து கார்பாக்சி ஹீமோகுளோபினாக மாறிவிடும். இதனால் இரத்தத்தில் பிராணவாயுவின் அளவு குறைந்துவிடும். இதயத் தசைகளுக்குத் தேவையான பிராணவாயுவின் அளவும் குறைந்துவிடும். நிகோடினைப் போலவே கார்பன்மோனாக்சைடும் இரத்தத்தில் உள்ள தட்டணுக்களை ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளச் செய்கிறது. மேலும், அது இரத்தத் தமனி நாளத்தில் கொழுப்புப் படிவதற்கும் துணை செய்கிறது. இதன் விளைவாக, புகை பிடிக்கும் பழக்கமுள்ளவர்களுக்கு இதயவலி, மாரடைப்பு ஆகிய நோய்கள் விரைவில் வந்துவிடுகின்றன.



வயிற்று வலிக்கும் வயிற்றுப் போக்குக்கும் தொடர்பு உண்டா?

● காழி. ஆர். சீதாராமன், தென்பாதி

? வயிற்றுவலிக்கும் வயிற்றுப் போக்கு ஏற்படுவதற்கும் என்ன தொடர்பு? இவை இரண்டையும் கட்டுப்படுத்த என்ன வழி, டாக்டர்?

அசுத்த உணவு மற்றும் குடிநீர் மூலம் பாக்டீரியா, வைரஸ், அமீபா, ஜியார்டியா ஆகிய கிருமிகள் நம் உணவுப் பாதைக்குள் நுழைந்து, சிறுகுடலையும் பெருங்குடலையும் அடைந்து, அவற்றைச் சிதைத்து, அழற்சியை ஏற்படுத்தி, புண்களை உண்டாக்கும்போது உணவு செரிப்பதில் தடை ஏற்பட்டு, நமக்கு வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது. குடலில் உண்டாகின்ற அழற்சி மற்றும் புண்களால் அப்போது

டாக்டர் கு.கணேசன்



வயிறு வலிக்கிறது. மருத்துவரின் நேரடி ஆலோசனைப்படி, வயிற்று வலியையும், வயிற்றுப் போக்கையும் கட்டுப்படுத்துவதற்குத் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். வயிற்றுப் போக்கின் போது உடலில் நீரிழப்பு ஏற்படுவது இயல்பு. இதனைத் தவிர்க்க, உப்பு-சர்க்கரைக் கரைசலைக் குடிப்பது நல்லது. உணவுத் தூய்மை மற்றும் குடிநீர்த் தூய்மையில் அதிகக் கவனம் செலுத்தினால் வயிற்றுப்போக்கு ஏற்படாது. குடிநீரைக் கொதிக்க வைத்து, ஆறவைத்துக் குடிப்பதும், ஈக்கள் மொய்க்காமல் உணவைப் பாதுகாப்பதும் இதற்கு உதவும். மேலும், கைவிரல்களை வெகுசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, நகங்களை அவ்வப்போது வெட்டிவிட வேண்டும். நகங்களுக்கு அடியில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

● ப. லட்சுமிசுந்தரம், வேலூர்

? எனக்குத் தலையில் நிறைய பேன்கள் உள்ளன. தலையைச் சொறிந்து சொறிந்து புண்ணாகிவிட்டது. இதனைக் குணப்படுத்த ஒரு நிரந்தர வழி கூறுங்கள் டாக்டர்!

! தலைப்பேன்களைக் கொல்வதற்கு பெர்மெத்ரின், காமா பென்சின் ஹெக்சாகுளோரைட் ஆகிய மருந்துகள் உள்ளன. இவற்றில் ஒன்றை இரவில் தலைமுடியில் தாராளமாகப் பூசி, ஒரு துணியால் தலைமுடிகளை ஒன்று சேர்த்துக் கட்டி வைத்துவிட வேண்டும். காலையில் எழுந்ததும் ஷாம்பூ அல்லது சியக்காய் தேய்த்துத் தலைக்குக் குளித்து விட வேண்டும். இப்போது தலையில் உள்ள எல்லா பேன்களும் இறந்து விடும். ஆனால் இந்த மருந்துகளுக்கு ஈறுகள் அழிவதில்லை. ஆகவே, அடுத்த 15 நாட்களில் ஈறுகள், பேன்களாக முழு வளர்ச்சியடைந்து, மறுபடியும் தொல்லை தரும். இந்தத் தொல்லையைத் தவிர்க்க 15 நாட்கள் கழித்து பேன் மருந்தை முதலில் கூறிய முறைப்படி மீண்டும் ஒருமுறை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு மீண்டும் மீண்டும் மருந்தைப் பயன்படுத்தினால் தலைப்பேன் தொல்லை ஒழியும். மேலும், வீட்டில் ஒருவருக்குப் பேன் இருந்தால் மிக விரைவில் மற்றவர்களுக்கும் அது பரவிவிடும். பேன் மருந்தை வீட்டில் உள்ள அனைவருமே ஒரே நேரத்தில் பயன்படுத்தினால் தலைப் பேன்கள் முழுவதுமாக ஒழியும். அடுத்து, உனக்குத் தலையில் புண்கள் உள்ளதாகவும் கூறியுள்ளாய். உனது குடும்ப மருத்துவரிடம் நேரில் ஆலோசனை பெற்றுத் தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி களிம்பைத் தலையில் உள்ள புண்களின்மீது தொடர்ந்து சில நாட்களுக்குப் பூசினால் புண்கள் குணமாகும். சமயங்களில் நுண்ணுயிர்க் கொல்லி மாத்திரைகளும் தேவைப்படும். தலைப் பேன்களால் ஏற்படுகின்ற அரிப்பைப் போக்க ஹிஸ்டமின் எதிர்ப்பு மருந்துகளில் ஒன்றை உபயோகிப்பது நல்லது. தலைத் தூய்மையைக் காப்பதுதான் தலைப் பேன்களை நிரந்தரமாகக் குணப்படுத்த சிறந்த வழி. தினமும் காலையில் குளிக்கும்போது ஷாம்பூ அல்லது சோப்பு நுரையில் தலைமுடியைக் கழுவ வேண்டும். உன்னிடம் உள்ள எல்லா உடைகளையும் ஒருமுறை வெந்நீரில் ஊறவைத்துத் துவைத்து, வெயிலில் உலர வைக்க வேண்டும். பின்பு இஸ்திரி போட்டு அவற்றை உடுத்த வேண்டும். வீட்டில் மற்றவர்கள் பயன்படுத்திய சீப்பு, ரிப்பன், ஹேர்பின், துண்டு, தலையணை ஆகியவற்றை நீ பயன்படுத்த வேண்டாம்.




8 ஆளப்பிறந்தவன்

கதை: ராஜி   படம்: லலிதா








அதற்காகத் தயாரித்துள்ள மணிமுடியைக் கொண்டு வந்து விடு. முடி சூட்டு விழாவில் மணிமுடி திருடு போவது தாங்க முடியாத அவமானம்.
நம்மை அவமானப் படுத்தியதற்கு அவனைப் பழி வாங்குவேன். எப்படியும் மணிமுடியோடு வருகிறேன்.
அதே நேரம் அரண்மனையில் –
இந்தக் கிரீடத்தை அணிந்து பாருங்கள் இளவரசே!
ம்... கொடுங்கள்.


சரியாகவே இருக்கிறது. ஆனால் ரொம்பக் கனமாகவல்லவா உள்ளது!
ராஜ்ய பாரம் என்று கூறுவதில்லையா? இதை நீங்கள் எப்போதும் அணிய வேண்டிய தில்லை.
தர்பாரில் இருக்கும்போது மட்டும் வைத்துக் கொண்டால் போதும்.
அப்படியா?
அது போகட்டும், இன்று என் நண்பர்களை விருந்துக்கு அழைத்திருக்கிறேன்.
விருந்துக்கா?
ஆமாம். ஏன் உங்கள் முகம் ஒரு மாதிரியாகப் போகிறது?
அந்தக் கிராமத்துச் சிறுவர்களையா விருந்துக்கு...


போதும் நிறுத்துங்கள். அவர்கள் என் நண்பர்கள். என்னிடம் அன்பு கொண்டவர்கள். அவர்களை உடனே அனுப்புங்கள். தெரிந்ததா?
தங்கள் சொல்படி செய்கிறேன். ஆனால்..
என்ன ஆனால்?
நீங்கள் அவர்களுடன் அரண்மனையை விட்டு வெளியே போகாதீர்கள்.
கிராமத்துச் சிறுவர்களுடன் குப்பனும் அரண்மனைக்குள் புகுந்தான்.
ஆஹா!
அற்புதம்!
(தொடரும்)



வேற்று நாட்டுப் பறவை யாவும்
விரும்பி வந்து சேரும்!
வேண்டும் உலக உறவை நாளும்
விளக்கி நன்கு கூறும்!

ஏற்றத் தாழ்வு மதங்கள் சாதி
எதுவும் இன்றிக் கூடும்!
எதுகை மோனைக் கவிதை போல
இனிய பண்கள் பாடும்!

காற்றில் நீந்தி அவற்றின் பாடல்
காதில் வந்து மோதும்!
கவலை நீங்க நமையும் பாடிக்
களிக்கச் சொல்லி ஓதும்!

போற்றும் வேடந் தாங்கல் ஏரிப்
புட்கள் பள்ளிக் கூடம்
புவியில் கூடி மாந்தர் வாழப்
புகட்டும் நல்ல பாடம்!

தளவை இளங்குமரன்

பாடும் பறவைகள்

கோகுலம் நியூஸ்

சாதனை!

விண்வெளி வரலாற்றில் மனிதன் அனுப்பிய செயற்கைக் கோள் முதல்முறையாக விண்கல்லில் இறங்கிச் சாதனை படைத்துள்ளது. பூமியிலிருந்து 20 கோடி மைல்களுக்கு அப்பால் இச் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. செவ்வாய் கிரகத்துக்கும் வியாழன் கிரகத்துக்கும் இடையே உள்ள பகுதியில் ஏராளமான விண்கற்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. அவை கரடுமுரடான பாறைகளால் ஆனவை. இவை ஒரு கி.மீ முதல் 1000 கி.மீ வரை சுற்றளவு கொண்டவை. அவற்றில் ஒன்றுதான் ஈராஸ். இந்த ஈராஸ் விண்கல்லுக்கு அமெரிக்கா 'நியர்' என்ற விண்கலத்தை அனுப்பியது. சரியாக ஓராண்டு கழித்து நியர் விண்கல்லில் இறங்கியது. புவிஈர்ப்பு விசை அதிகமாக உள்ள கிரகங்களிலும் துணைக்கோள்களிலும் தான் இதுவரை விண்கலங்கள் இறங்கியுள்ளன. ஆனால் இப்போது ஈர்ப்பு விசை மிகக் குறைவாக உள்ள விண் கல்லில் விண்கலம் இறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வால் நட்சத்திரங்களிலும் விண்கலங்களை இறக்குவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. நியர் நிறைய புகைப் படங்களை எடுத்து அனுப்பியுள்ளது. இதன்மூலம் உலகில் உயிரினம் தோன்றியது எப்படி என்பது தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கக்கூடும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

கண்டுபிடிப்பு!

ஆஸ்துமா நோய்க்கு 50, 60 ஜீன்கள் காரணமாக இருக்கலாம் என்று இதுவரை விஞ்ஞானிகள் கருதி வந்தனர். ஆஸ்துமாவுக்குக் காரணம் ஒரே ஒரு ஜீன்தான் என்று கண்டுபிடித்துள்ளார் இங்கிலாந்து மருத்துவரான ஸ்டீபன், ஹோல்கேட். ஆஸ்துமாவுக்குத் தூசி, மருந்து போன்ற விஷயங்கள் ஒரு காரணமாக இருந்தாலும் இந்த ஜீன்தான் முக்கியக் காரணம் என்று இவர் தெரிவித்துள்ளார். நோய்க்குக் காரணமான ஜீனைக் கண்டு பிடித்துவிட்டதால் இனி இதற்கு எதிர்ப்பு மருந்து கண்டுபிடிப்பது சுலபம் என்றும் கூறியுள்ளார் ஸ்டீபன். 25 ஆண்டு கால ஆராய்ச்சிகளுக்குப் பின் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


ரஸ்னா

கோடை என்றதுமே தாகத்தைத் தீர்ப்பதற்குக் குளிர் பானங்களின் வருகை அதிகரித்து விடும். இந்தக் கோடையில் ரஸ்னா குழந்தைகளைக் கவரும் விதத்தில் விதவிதமான சுவைகளில் பானங்களை வழங்குகிறது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு பாக்கெட்டிலும் பாம்பு, சிலந்தி, எறும்பு, கரப்பான், எலி, வெட்டுக் கிளி, எலும்புக்கூடு போன்ற பொம்மைகளையும் வைத்திருக்கிறது. சில பொம்மைகளைக் கையில் மாட்டிக் கொள்ளலாம்; சிலவற்றை விரலில் மாட்டிக் கொள்ளலாம். இதில் எலும்புக் கூடு உள்ள பாக்கெட்டுகளில் மட்டும் ஒரு கடிதம் வைக்கப்பட்டுள்ளது. அதை அனுப்பினால் பெரிய எலும்புக் கூடு பொம்மையை அனுப்பி வைப்பார்களாம்! தாகமும் தீரும்; தமாஷாகப் பொழுது போக்க பொம்மையும் கிடைக்கும்!



ஒலியை உணருவது எப்படி?

'நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே' என்ற பாரதியின் பாடலையும், 'டொய்ங் டொய்ங்' என்ற கொசுவின் ரீங்காரத்தையும், அமைதியான நள்ளிரவில் 'டிக், டிக்' என்ற கடிகாரத்தின் ஓசையையும் உங்களுக்கு உணரச் செய்பவன் நான்தான். நீங்கள் விஷமம் செய்யும் போது உங்கள் அப்பாவிடமோ, ஆசிரியரிடமோ அகப்பட்டுக் கொள்வதும் நான்தான். என் பெயர் காது என்பதை நீங்கள் கேட்டதும் உங்கள் நினைவுக்கு வருவது தலையின் பக்கவாட்டுகளில் நீட்டிக் கொண்டிருக்கும் உறுப்புதானே? ஆனால் இவை என்னில் மிகச் சிறிய பகுதிதான். வெளியிலுள்ள ஒலிகளைக் குவித்து செவிப்பாதைக்குள் செலுத்துவதும்; ஒலி வரும் திசையைக் கண்டறிவதும்தான் வெளிக்காதின் பணி.




வெளிக் காதின் பணி இவ்வளவுதானா? என்று நீங்கள் சந்தேகப்படுவது புரிகிறது. என் பணியை நான் சொல்கிறேன். பிறகு நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஒலியலைகள் வெளிக்காதினைத் தொட்ட பின், குகை போன்ற செவிப்பாதை வழியே நுழைகிறது. அங்குள்ள செவிப்பறையைத் தாக்கி, அதனுடன் தொடர்புடைய மூன்று நடுச் செவி எலும்புகளின் ஊடே பயணித்து, பின் உட்செவியிலுள்ள திரவத்தையும், அங்கிருக்கும் உணர் செல்களையும் தாக்குகிறது. அதன் பின் நரம்பு செய்திகளாக மாற்றப்பட்டு மூளையிலுள்ள கேட்கும் பகுதியை அடைகிறது. இவ்வாறு நீண்ட பயணம் செய்த பின்தான் நீங்கள் எந்த ஒரு ஒலியையும் கேட்க முடிகிறது. மேலே சொன்ன இந்தப் பயணம் நொடிக்கும் குறைவான நேரத்தில் நடைபெறுகிறதென்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா?

செவிப்பறை பல திசைகளிலிருந்தும் இழுத்துக் கட்டப்பட்ட நார்ப் பொருளால் ஆனது. இதன் கனம் 0.1 மி.மீ. அளவே; இதன் பரப்பு 70 ச.மி.மீ. இதனை ஒட்டியுள்ள சுத்தியல் எலும்பு, அதற்கடுத்துள்ள அகலமான பட்டடை என்ற எலும்பு, கடைசியாக இருக்கும் அங்கவடி என்ற எலும்பும் சேர்ந்ததே நடுச்செவி. இந்த மூன்று எலும்புகளும் உடலின் மிகச் சிறிய எலும்புகளாகும். செவிப் பாதை வழியே சென்ற ஒலி சுத்தியல் எலும்பை அடைந்த



தும், சுத்தியல் எலும்பு, செவிப்பறையில் மோதி அதிர்வை உண்டாக்கும். அங்கிருந்து பட்டடை எலும்பு மற்றும் அங்கவடி எலும்புகள் மூலம் உட்செவிக்குள் ஒலி நுழையும். இங்கிருந்து செல்லும் ஒலி இரண்டரை மடங்கு சுருண்ட காக்கிலியா எனப் படும் நத்தை வடிவ எலும்பை அடையும். இந்தக் காக்கிலியா மண்டை ஓட்டுக்குள் மிகப் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது. இதுதான் நிஜமாகவே உங்களைக் கேட்கச் செய்யும் காதாகும். இதற்குள் 3 அறைகள் திரவத்தால் நிரப்பப்பட்டுள்ளன. நடு அறையில் உள்ள திரவத்தில் சிறப்பு வாய்ந்த 24,000 'மயிர் செல்கள்' பல வரிசைகளில் அடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு 'கார்டி உறுப்பு' என்று பெயர். பிறகு ஒலி மூளையின் செவிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கேதான் இவ்வொலிகள் சாப்பிட அழைப்பது உங்கள் அம்மாவா, பாட்டியா என்பதையும், தெருவில் கத்துவது நாயா, கழுதையா என்பதையும் உங்களுக்கு அறிய வைக்கிறது.



உங்களுக்கு ஒலியைக் கேட்கச் செய்வது மட்டுமே என் பணி அல்ல. காதுகேட்கா விட்டாலும் உங்களால் வாழ்ந்து விட முடியும். அதைவிட முக்கிய பணியை உட்செவியின் மறு பக்கத்திலுள்ள மூன்று அரை வட்ட குங்கிலியங்கள் எனப்படும் குழாய்கள் செய்கின்றன. என்ன தெரியுமா? உங்கள் உடலைச் சமநிலையில் வைத்திருக்க உதவுவது இந்தக் குங்கிலியங்கள்தான். நீங்கள் நடக்கிறீர்களா? படுக்கிறீர்களா? தலை திரும்பி இருக்கிறதா? போன்ற செயல்களைக் குங்கிலியங்கள் மூளைக்கு எடுத்துச் சென்று மூளை உங்கள் தலை திரும்பி இருப்பதை உங்களுக்கு உணர்த்துகிறது. இது இல்லாவிட்டால் நீங்கள் தள்ளாடிதான் நடக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் தட்டாமாலை ஆடி அமரும் போது உலகமே உங்களைச் சுற்றி வருவது போலிருக்கிறதா? இது ஏன் தெரியுமா? நீங்கள் வேகமாகச் சுற்றும் போது காதுக்குள் உள்ள குங்கிலியங்களிலுள்ள திரவமும் சேர்ந்து சுற்றுகிறது. நீங்கள் சுற்றுவதை நிறுத்தி உட்கார்ந்ததும் உடல் நின்று விட்டாலும் திரவம் சமநிலைக்கு வராமல் தத்தளித்துக் கொண்டிருக்கும். அது சம நிலையை அடைய சிறிது நேரம் ஆகும் வரை உங்களுக்குத் தலை சுற்றுவது போன்ற உணர்வே ஏற்படுகிறது.

நடுக்காதிலிருந்து ஈஸ்ட்டாச்சியன் குழல் தொண்டைக்குச் செல்கிறது. இதன் காரணமாக நீங்கள் வாய் வழியே காற்றை அதிகமாக சுவாசிக்கும் போதும், தண்ணீரை வேகமாக விழுங்கும் போதும் காது அடைப்பது போல் தோன்றும். காற்றின் அழுத்தம் ஈஸ்ட்டாச்சியன் குழல் வழியே நுழைந்து செவிப்பறையைத் தாக்குவதால் காது அடைக்கிறது. விமானத்தில் பயணம் செய்யும் போதும் இதே நிலைதான் ஏற்படுகிறது. அதாவது விமானம் பறக்கும் போது விமானத்தில் காற்றழுத்தம் லேசாகக் குறைகிறது. உங்கள் உடல் பூமியிலுள்ள காற்றழுத்தத்தை



ஒத்திருக்கும். சூழலைவிட உடலிலுள்ள காற்றழுத்தம் அதிகமானவுடன் அது ஈஸ்டாச்சியன் குழல் வழியே செவிப்பறையை அடைந்து, அதனை மோதி, லேசாக உப்ப வைத்து காதடைப்பு உணர்வை உண்டு பண்ணுகிறது.

முதுகெலும்புள்ள எல்லா விலங்குகளுக்கும் கேட்கும் தன்மை உண்டு. ஆனால் மீனுக்கு உங்களைப் போல் வெளிச் செவி, நடுச்செவி கிடையாது. உடல் முழுவதுமே உணர் செல்கள் உள்ளன. இதன் மூலம் நீரில் ஏற்படும் அதிர்வலைகளையும், எதிரிலுள்ள பொருட்களையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. தவளை, ஊர்வன, பறப்பன போன்றவற்றிற்கும் வெளிச் செவி கிடையாது. நடுச்செவியும் உட்செவியும் உண்டு.


பெரும்பான்மையான பூச்சிகளின் செவிகள் உணர்கொம்புகளின் நுனியில் உள்ளன. கொசுவுக்கு உணர்கொம்பிலும், ஈக்குக் கால்களிலும், பட்டாம்பூச்சி மற்றும் மூட்டைப் பூச்சிகளுக்கு மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளிலும் செவிப்புலன் இருக்கிறது.

பறக்கும் பாலூட்டிகளான வௌவால்கள் நீங்கள் கேட்க முடியாத ஒலிகளையும் கேட்கும் திறன் கொண்ட செவிகளைப் பெற்றுள்ளன. பொருட்களின் மீது மோதி எதிர்வரும் ஒலியலைகளை வைத்தே, எதிரிலுள்ள பொருட்களின் தன்மையை வௌவால் அறிந்து கொள்கிறது. இதைப் போலவே நீர்வாழ் பாலூட்டிகளான திமிங்கலம் மற்றும் டால்ஃபின்களும் நீரில் ஏற்படும் எதிர் ஒலியலைகளை வைத்து பல்வேறு பொருள்களை அறிந்து கொள்கின்றன.

என்னுடைய பணியைப் பற்றி ஓரளவு உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். என்னை எப்படி பாதுகாக்கணும் என்பதையும் உங்களுக்குச் சொல்வது எனக்கு நல்லது.

கண் பாதுகாப்பை விட செவிப் பாதுகாப்பு ரொம்ப முக்கியம். உங்களில் சிலர் குளிக்கும்போது காதுக்குள் எண்ணெய் விட்டுக் கொள்கிறீர்கள். பாம்புப் புற்றுக்குள் பால் ஊற்றுவதால் பாம்பு பால் குடிப்பதில்லை. அது போலத்தான் 'எனக்குள் ஊற்றும்' எண்ணெய்யின் 'நிலையும். இதனால் ஒரு பலனும் இல்லை. எனக்குப் பாதிப்பு ஏற்படுவது நிச்சயம்.

அடுத்து உங்கள் கைக்குக் கிடைக்கும் குச்சி, கம்பி, கோழி இறகு போன்றவற்றை எனக்குள் விட்டுக் குடைவது மிகவும் ஆபத்து. இப்படி நீங்கள் செய்வதால் செவிப்பறை கிழிந்து விடும். லேசாகக் கிழிந்தால் கூட அப்புறம் நான் பேசறது மட்டுமல்ல; யார் பேசுவதையும் உங்களால் கேட்கவே முடியாது.



குளிக்கும் போது காதுகளுக்குப் பஞ்சு வைத்து விட்டுக் குளித்தால் தண்ணீர் உள்ளே சென்று தேங்கி கிருமிகள் உருவாவதைத் தடுத்து விடலாம்.

140 டெசிபலுக்கு மேலுள்ள ஒலியை நீங்கள் தொடர்ந்து கேட்க நேர்ந்தால் நான் கேட்கும் தன்மையை இழப்பது நிச்சயம். அதிக சத்தத்தில் வேலை செய்பவர்கள் காதுக்குப் பஞ்சு வைத்துக் கொள்வது நல்லது.

எனக்குள் நீர் புகுந்தாலோ, அல்லது வலித்தாலோ உடனே மருத்துவரை அணுகுங்கள். நீங்களே மருத்துவம் செய்து என்னைச் சிக்கலில் மாட்டி விடாதீர்கள், ப்ளீஸ்!

— எஸ். மோகனா

கீழே பத்து கேள்விகள் கொடுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இதில் ஒரு விடை சரியானது. சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, முகவரி கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப் புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். கடைசி தேதி 30.4.2001



கோகுலம் க்விஸ்

1. சுதந்திர தேவி சிலை உள்ள இடம்?
அ) நியூயார்க் ஆ) லண்டன் இ) பாரீஸ்

2. டால்ஃபின்கள் எந்த வகையைச் சேர்ந்தவை?
அ) சுறா ஆ) சீல் இ) திமிங்கலம்

3. இலங்கையின் தலைநகர்?
அ) கொழும்பு ஆ) யாழ்ப்பாணம் இ) வவுனியா

4. கபில்தேவ்ன் உலக சாதனையை (435 விக்கெட்டுகள்) முறியடித்தவர்?
அ) அக்ரம் ஆ) வால்ஷ் இ) மெக்ராத்

5. பெரிய புராணத்தை இயற்றியவர்?
அ) பிசிராந்தையார் ஆ) வள்ளலார் இ) சேக்கிழார்

6. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்?
அ) பாளையங்கோட்டை ஆ) கயத்தாறு இ) பாஞ்சாலங்குறிச்சி

7. இதில் வைகை நதி எந்த மாவட்டத்தில் பாய்கிறது?
அ) சென்னை ஆ) மதுரை இ) கோவை

8. தமிழ் தாத்தா என்று அழைக்கப் பட்டவர்?
அ) மறைமலை அடிகளார் ஆ) உ.வே. சாமிநாத ஐயர் இ) திரு.வி.க.

9. ஆகாயத் தோட்டி எது?
அ) கழுகு ஆ) காகம் இ) ராஜாளி


10. பூமிக்கு எத்தனை துணைக்கோள்?
அ) 2 ஆ) 1 இ) 6

கோகுலம் சுழல் கோப்பை



கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறு கின்றனவோ அப்பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையைக் கைப்பற்ற பல பள்ளிகள் தயாராகி வருகின்றன. உங்கள் பள்ளியும் கோப்பை பெற வேண்டுமா? உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!


ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97



ஆர். பொன்னம்மாள்

உதங்கர் என்று ஒரு ரிஷி. அவர் சதாசர்வ காலமும் பகவானையே தியானம் செய்வார். உணவு கிடைக்க வில்லை என்றாலும் நாட்டுக்குத் திரும்ப மாட்டார்.

பாரத யுத்தம் முடிந்து கிருஷ்ணர் துவாரகைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் உதங்கரைச் சந்தித்தார். தேரிலிருந்து இறங்கி வந்து நமஸ்கரித்தார். உதங்கரும் பதில் வணக்கம் சொன்னார். பிறகு, "கிருஷ்ணா! பாண்டவர்களும், கௌரவர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்களா?



அஸ்தினாபுரத்தில் எல்லோரும் நலம்தானே?" என்று கேட்டார்.

கிருஷ்ணருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'என்னடா இது! நாட்டு விஷயமே தெரியாமல் இப்படி கேட்கிறார். எங்கே ஆரம்பிப்பது, எப்படி சொல்வது' என்று குழம்பினார்.

பிறகு மெதுவாக, "உதங்க மாமுனிவரே! நானும் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் சமாதானம் பண்ண எத்தனையோ முயற்சி பண்ணினேன். துரியோ

தனன் சூதாட்டத்தில் பாண்டவர்கள் சொத்தை யெல்லாம் அபகரித்துக் கொண்டு அவர்களைக்

காட்டுக்குத் துரத்தி விட்டான். 12 வருடம் வனவாசமும், ஒரு வருடம் அக்ஞாத வாசமும் முடிந்து திரும்பி வந்த பிறகு அவர்கள் பங்கைக் கேட்க நானே தூது சென்றேன். துரியோதனன் ஊசி முனை நிலம் கூட கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டான். முன்பு காண்டவ வனத்தைக் கொடுத்தது போல் இப்போதும் ஐந்து வீடுகளாவது கொடுத்து சமரசம் பண்ணிக் கொண்டிருக்கலாம்.

"க்ஷத்திரியர்கள் பேசாதிருந்தால் கோழை என்று வரலாறு முத்திரை பதித்து விடுமே! போர் வந்தது. நான் ஆயுதமே எடுக்கவில்லை. பாண்டவர்களுக்குத் தேரோட்டினேன். கௌரவர்களுக்கு என் சேனைகளைக் கொடுத்தேன். அதர்மமாய் நடந்த கௌரவர்கள் மாண்டார்கள். பாண்டவர் பங்கிலும் பலத்த நஷ்டம்தான். தர்மம் ஜெயித்தது. தருமன் முடிசூட்டிக் கொண்டாலும் திருதராட்டினனையும், காந்தாரியையும் அன்புடன் பாதுகாக்கிறான். முடிசூட்டு விழா முடிந்து துவாரகை சென்று கொண்டிருக்கிறேன்" என்று சுருக்கமாகக் கூறினார் கிருஷ்ணர்.

ஆனால் உதங்கர் முகம் கடுக்க, விழிகள் சிவக்க, "நீ என்ன சமாதானம் சொன்னாலும் ஏற்பதற்கில்லை! நீ ஓரவஞ்சகம் செய்து விட்டாய்! நான் உன்னை சபிக்கப் போகிறேன்" என்றார்.

"உதங்கரே! பொறுமை! பொறுமை!" என்று கூறிய கிருஷ்ணர் விஸ்வரூபம் எடுத்தார்.

"முனிவரே! ஒருபுறம் உயிர்கள் என்னுள் இணைகின்றன. அதில் கௌரவரைப் பாருங்கள். மறுபுறம் உயிர்கள் பூவுலகிற்குச் செல்கின்றன. இதுதான் பிறப்பும் இறப்பும். மனிதனாகப் பிறப்பெடுத்த நானும் ஒருநாள் மடிவேன். என்னைச் சபிப்பதால் உங்களது தவப்பயன் அழியும். காரணங்கள் வேறாக இருந்தாலும் மரணம் தவிர்க்க முடியாதது. பாண்டவர்களை வஞ்சனையாக அரக்கு மாளிகையில் எரிக்கப் பார்த்த துரியோதனன் செய்தது வஞ்சகம் இல்லையா? நிறைந்த சபையில் திரௌபதியை மானபங்கப்படுத்தியதற்குத் தண்டனை பெற்றது குற்றமாகுமா? இந்தக் குற்றத்திற்குப் பிறகும் பதிமூன்று ஆண்டுகள் சுகமாக நாட்டை ஆண்டார்கள்" என்று கூற உதங்கர் அமைதியானார்.

விஸ்வரூப தரிசனம் கண்டு மகிழ்ந்தார்.

கிருஷ்ணர், "உதங்கரே! சுயலாபம் கருதாமல் எல்லோரும் நலமாயிருக்க ஆசைப்படும் உங்களின் ஒப்பற்ற குணத்திற்கு ஒரு வரம் கொடுக்க ஆசைப்படுகிறேன். கேளுங்கள்" என்றார்.

உதங்கர், "பிரபோ! தாகம் நாக்கை வரட்டும் போது தண்ணீர் கிடைக்கச் செய்தால் அதுவே பெரும் பரிசு" எனக் கோரினார். அப்படியே வரமளித்து தேரிலேறிச் சென்றார் கிருஷ்ணர்.

கந்தல் மனம்!



ஒருநாள் தாகம் கொண்ட உதங்கர் தண்ணீருக்காகக் காட்டில் அலைந்தார். கண்ணன் கொடுத்த வரத்தை நினைத்தார். தூரத்தில் ஒரு புலையன் வருவது தெரிந்தது. உடலில் போதிய ஆடை இல்லை. இருந்த ஆடையும் அழுக்குக் கந்தல். அவலட்சணமான முகம். கூடவே நான்கு நாய்கள். தோளில் ஒரு தோல் பை. அதன் முகப்பில் ஒரு மூங்கில் குழாய்.

புலையனின் ஆடைதான் கந்தல். துச்சாதனனின் புத்தியே கந்தல். புலையனின் முகம்தான் கோரம். துரியோதனனின் மூளையே கோரம்..

உதங்கரை நெருங்கியதும் அவன், "ஐயா! விக்கலெடுக்கிறதே! இந்த ஜலத்தைக் குடியுங்கள்" என்று தோளிலிருந்து பையைக் கழற்றி மூங்கில் குழாயை நீட்டினான். உதங்கர் முகச் சுளிப்புடன், "தூரப் போ, ஒரே நாற்றம். அசிங்கம் பிடித்தவனே! உன்னிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பதை விட உயிரை விடுவது மேல்" என்றார்.

அவன் விடுவதாயில்லை. பின்னாலேயே அலைந்தான். "ஐயா! தண்ணீருக்குத் தோஷம் கிடையாது. கங்கையில் பாவியும், அப்பாவியும் குளிக்கின்றனர். முனிவரும், நாத்திகனும் அதே நீரைச் சமையலுக்குப் பயன்படுத்துகின்றனர். வறட்டுப் பிடிவாதத்தை விடுங்கள்" என்றான்.

மனம் சபலப்பட்டு விடுமோ என்ற பயத்தில் புலையனைக் கடுமையாகத் திட்டி அனுப்பினார் உதங்கர்.


புலையன் நாய்களோடு மறைந்தான். உதங்கர் மனம் 'சரி'யென்றது.

'இது கண்ணனின் சோதனையாயிருக்குமோ? உயிருக்கு அழுக்கு உண்டா? என் தவமும், ஞானமும் தோற்றுப் போயிற்றே!' என்று வருந்தினார்.

அப்போது சங்கு சக்கரத்துடன் கிருஷ்ணர் தோன்றி, "உதங்கரே! உங்களுக்காக இந்திரனிடம் நான் அமிர்தத்தைக் கொண்டு போகச் சொன்னேன். அவன் பூலோகவாசிகளுக்கு அமிர்தம் கொடுக்கக் கூடாது என்றான்.

"நான் உங்களது பெருமைகளைச் சொல்லி வற்புறுத்தினேன். அவன் புலையன் வடிவில் வந்தான். அவனது தோல் பையிலிருந்தது அமிர்தம். உங்களைத் தரிசிக்க நான்கு வேதங்களும் நாய் வேடம் தரித்து அவன் பின்னே வந்தன. அழுக்கு மனதில்தான் இருக்கக் கூடாது. உடம்பில் உள்ள துணி அழுக்கென்று அவனை வெறுத்தீர்! துரியோதனன் மனமெல்லாம் அழுக்கு எண்ணங்கள். புலையனின் ஆடைதான் கந்தல். துச்சாதனனின் புத்தியே கந்தல். புலையனின் முகம்தான் கோரம். துரியோதனனின் மூளையே கோரம். இப்போது சொல்லுங்கள். நான் கபடனா?" என்று கேட்டார்.

"பகவானே! சரியான பாடம் கற்றுக் கொண்டேன். ஆராயாது உம்மைச் சபிக்க முற்பட்டதால் அமிர்தத்தையும் இழந்தேன்" என்று கிருஷ்ணரை வணங்கினார் உதங்கர்.



100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

இந்த மாதம் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வைக்கவேண்டும்.

இந்த மாதப் போட்டி:

புகழ்பெற்ற விக்டோரியா நீர் வீழ்ச்சி எங்குள்ளது?

மேற்கண்ட பகுதிகளுக்கான போட்டி இன்னும் இரண்டு மாதங்களுக்குத் தொடரும். போட்டியில் கலந்து கொள்ளுங்கள். பரிசை வெல்லுங்கள்!

I CHOOSE A CAREER?
CAREER CHOOSES ME?
✔ The right answer!

Cover Feature



THE SPIRIT OF FRIENDSHIP

True Story

WHY DOES HAIR TURN GREY?

Hello Doctor



A MONK WHO INSPIRED THE WORLD

Personality

+ ALL REGULAR FEATURES

Poster : Steve Waugh



GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097


APRIL 2001

Rs.6/-

எங்கள் பள்ளியில் நடந்தது!

ஆறு போனால்...

எங்கள் வகுப்பாசிரியர் ஜாலியாகப் பாடம் நடத்தக் கூடியவர். ஒரு நாள் எங்களிடம் "எண்ணூரில் ஆறு போனால் என்ன வரும்?" என்று கேட்டார். வகுப்பில் பாதி மாணவர்கள் "794 வரும்" என்றனர். ஆசிரியர் "இது கொஞ்சம் வித்தியாசமான கேள்வி. யோசிச்சு பதில் சொல்லுங்கள்" என்றார். உடனே என் நண்பன் எழுந்து, "எண்ணூரில் மட்டுமில்லை சார்... எந்த ஊரில் ஆறு போனாலும் தண்ணீர் தான் வரும்" என்றானே பார்க்கலாம்! உடனே ஆசிரியரின் முகத்தில் சந்தோஷம். "மேல் வகுப்பில் படிக்கும் மாணவர்களிடம் ஒரு சாதாரணக் கேள்விக்கு நான் பதிலை எதிர்பார்க்க மாட்டேன் என்று நினைத்து சரியாகப் பதில் சொன்னே. எல்லோரும்' கைதட்டுங்க" என்றார் கைதட்டியபடி ஆசிரியர்.




- எஸ். அபிஷேகா,
உசிலம்பட்டி.

வண்ணம்

தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மகாபாரதத்தில் கிருஷ்ணர் பற்றி பாடல் நடத்தும்போது "கிருஷ்ணர் உடல் கருமையாக இருந்தாலும் அவரது உள்ளங்கை வெள்ளையாக இருக்கும் அவர் மனதைப் போல" என்று கூறி நிறுத்தினார். உடனே முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவன் சட்டென தன் உள்ளங்கையைத் தூக்கிப் பார்த்தான். எல்லோரும் சிரித்துவிட்டோம். ஏனென்றால் அவனும் கிருஷ்ணரின் நிறம்தான்.

- அ. சுபா, எட்டாம் வகுப்பு, ஏ.எம்.ஜி.
மேல்நிலைப் பள்ளி, நடூர், தருமபுரி மாவட்டம்

என்ன?



அன்று தமிழ்ப் பாட வேளை. ஆசிரியர் வகுப்பிற்கு வந்ததும், முந்தைய நாள் படித்து வரச் சொன்ன 'அருஞ்சொற்பொருள்' பகுதியை, மாணவிகளிடம் கேட்டார். பத்து கேள்விகளுக்கும் சரியான பதில் சொன்னவர்களுக்குப் பேனா பரிசாகத் தந்தார். என் தோழி ராதாவிடமும் கேட்க, அவள் ஒன்பது கேள்விகளுக்கு விடையளித்து, கடைசிக் கேள்விக்கு விடை தெரியாமல் விழித்து நிற்க, ஆசிரியர், "நேரம் முடிஞ்சிடுச்சு! பரிசை தட்டிச் செல்லும் வாய்ப்பினை இழந்துவிட்டாய்!" என்று கூறினார். அடுத்து இருந்த மாணவியிடம் கேட்க ஆரம்பித்தார். அப்போது என் தோழி ராதா திடீரென ஆசிரியரிடம், "டீச்சர் நீங்கள் கேட்ட பணி என்ற அருஞ் சொற்பொருளிற்கு விடை- வேலை" என்றாள். "நான் கேட்டபோது வாயில் கொழுக்கட்டையா வைத்திருந்தே?" என்று கேட்




டார் ஆசிரியர். "சூயிங்கம் வைத்திருந்தேன் டீச்சர்!" என்று அவன் கூற வகுப்பே சிரித்தது. வகுப்பில் சூயிங்கம் சாப்பிட்டதற்காக ஆசிரியர் பரிசு தர மறுத்து விட்டார்.

- ஏ.எல்.ராவியாகனி,
103, மார்க்கெட் வீதி,
காரைக்கால்

அவ்வளவு உயரமா?

ஆங்கில ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது "டெல்லியிலுள்ள இந்தியா கேட் 42 மீட்டர் உயரமுடையது'' என்றார். பின் வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவன் எழுந்து "ஒரு சந்தேகம் சார். இந்தியப் பூனையாக இருந்தாலும், ஆப்பிரிக்கப் பூனையாக இருந்தாலும் அவ்வளவு தூரம் வளர வாய்ப்பில்லை சார். ஒரு வேளை டைனோசர் காலத்தில் இருந்திருக்கலாம்" என்றான். ஆசிரியருக்குப் புரியவில்லை. சற்று நேரம் யோசித்துவிட்டு ''உண்மையிலேயே புரியலையா உனக்கு? இல்லை விளையாடறியா? இந்தியா கேட் அதாவது நுழைவாயிலைப் பற்றிச் சொன்னேன்" என்றார். உடனே அவன் மன்னிப்புக் கேட்டான்.



- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேது மாணிக்கம் உயர் நிலைப்பள்ளி, மேலச்சீத்தை.

ஹாயில் என்ன இருந்தது?


29 நாட்கள்?

ஒரு நாள் புவியியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ''லீப் வருடத்தில் எந்த மாதத்தில் 29 நாட்கள் வருகின்றன?" எனக் கேட்டார். ஒரு மாணவன் எழுந்து நின்று, "பிப்ரவரி மாதம் சார்" என்று பதில் சொன்னான். ஆசிரியர் அவனைச் சரியான பதில் என்று கூறி உட்கார வைத்தார். இன்னொரு மாணவன் எழுந்து நின்று, "அவன் சொன்னது தவறு சார்" என்றான். ஆசிரியர், "எப்படி?" என்றார். ''எல்லா மாதங்களிலும்தான் 29 நாட்கள் வருகின்றன'' என்று சொன்னான். ஆசிரியர் அவனை முறைத்தவுடன் அமைதியாக உட்கார்ந்துவிட்டான்.





- ப. ரவிச்சந்திரன்,
பதினோராம் வகுப்பு, அரசினர்
அண்ணா மேல்நிலைப் பள்ளி,
அதியமான்கோட்டை,
தருமபுரி மாவட்டம்.



முதல் பரிசு :

எஸ். திவ்யா,


ஏழாம் வகுப்பு, அ. உ. பள்ளி,

கொடிமங்கலம் அஞ்சல், மதுரை.

இரண்டாம் பரிசு :

எஸ். அபிநயா,

திருநெல்வேலி.



ஓவியப்போட்டி முடிவுகள்


பிப்ரவரி இதழில் யானை என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



மூன்றாம் பரிசு :
வா. ஜெய கணேஷ்,
எட்டாம் வகுப்பு,
விருது நகர்
இந்து நாடார்
மேல்நிலைப்
பள்ளி, மதுரை.

ஆறுதல் பரிசு :
ஜி. நெல்சன் ஜோசப்
பன்னிரண்டாம் வகுப்பு, டி.எம்.கே.வி. அரசு மேல் நிலைப் பள்ளி, அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம்.





ஆறுதல் பரிசு :
டி.ஜி. சிவப்ரியா
நான்காம் வகுப்பு, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.

ஓய்வுநாளில்கூட போர் புரிய வேண்டுமா?

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு பாதிரியார் அவரைச் சந்திப்பதற்காக வந்தார்.

அந்தச் சமயத்தில் உள்நாட்டுக் கலகம் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதை அடக்குவதற்கு அமெரிக்க நாட்டு இராணுவம் போராடிக் கொண்டிருந்தது.

பாதிரியார் லிங்கனை நோக்கி, "ஜனாதிபதி அவர்களே! ஓய்வு நாளான ஞாயிற்றுக் கிழமையில்கூட நமது நாட்டு இராணுவம் போர் புரிந்து கொண்டிருக்கிறதே, இது ஆண்டவனின் தியானத்தைக் கெடுக்கக்கூடிய செயல் அல்லவா? ஞாயிற்றுக் கிழமை அன்றைக்காவது போரை நிறுத்துமாறு நமது அமெரிக்கப் படைகளுக்குத் தாங்கள் உத்தரவிடக் கூடாதா?" என்று கேட்டார்.

"ஞாயிற்றுக் கிழமைகளில் போரிடுவது கடவுளுக்கு விரோதமான செயல்தான். ஆனால், நாம் போரை நிறுத்துவதற்கில்லை. தயவுசெய்து தாங்கள் கலகக்காரர்களிடம் சென்று, ஞாயிற்றுக் கிழமை மட்டும் கலகம் செய்யாமல் இருங்கள் என்று கூறி அவர்கள் மனத்தைத் திருத்துங்கள்" என்றார், சிரித்துக் கொண்டே லிங்கன்.


- டி. எஸ். பாலு, சென்னை.

• ஆபிரகாம் லிங்கன்



பாராட்டு

தாமஸ் ஆல்வா எடிசன் 16வது வயதில் ஆய்வுகள் செய்ய பண வசதி இல்லாமல் இருந்தார். அப்போது அமெரிக்காவிலுள்ள ஒரு தங்கம் பிரித்தெடுக்கும் கம்பெனியுடைய பங்குமார்க்கெட் அலுவலகத்தில் வேலைக்கு ஆள் எடுக்கிறார்களென அறிந்து, வேலைக்குச் சென்றார். கியூவில் இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர். அப்போது அவ்வலுவலகத்திலுள்ள, பங்கு விலைகளை அறிவிக்கும் 'டிக்கர்' கருவி கெட்டுவிட்டது. எடிசன் உடனே அதைச்சீர் செய்தார். இதைப் பார்த்த கம்பெனி தலைவரான 'மார்ஷல் லெபர்ட்ஸ்' என்பவர் ஆண்டுக்கு 3600 டாலர் சம்பளத்தில் வேலை கொடுத்ததோடு, எடிசனின் சேவையைப் பாராட்டி 4000 டாலர்களுக்கு செக் ஒன்றை



● தாமஸ் ஆல்வா எடிசன்

யும் வழங்கினார்.

- சா. அனந்தகுமார், பேச்சிப்பாறை, குமரி மாவட்டம்

குப்பை கொட்டிய கிழவி

நபிகள் நாயகம் அவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவரது எதிரிகள் பலவழிகளிலும் அண்ணலாரைத் துன்புறுத்தி வந்தார்கள். கல்லையும் முள்ளையும் நபிகளார் செல்லும் பாதையில் வீசி எறிந்தனர்.

அப்போது மெக்காவில் கிழவி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவளும் அண்ணலாரைப் பற்றிய தவறான செய்திகளைக் கேட்டு வெறுப்புற்று அவரைப் பழிவாங்கும் வஞ்சினம் கொண்டாள்.

அதிகாலையில் அண்ணலார் தொழுகைக்குச் செல்வது வழக்கம். அப்பொழுது அந்தக் கிழவி தன் வீட்டு வாசலில் காத்திருந்து அவர்மீது குப்பைகளைக் கொட்டுவாள். இப்படியே தினமும் அக்கிழவி செய்து வந்தாள். நபிகள் நாயகம் பொறுமையுடன் கிழவியின் செயலைச் சகித்துக் கொண்டார்.

சில நாட்களாகக் கிழவி குப்பை கொண்டு வந்து கொட்டவில்லை. அண்ணலார் அக்கிழவியைப் பற்றி விசாரித்தார். அவள் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகத் தெரியவந்தது. உடனே அண்ணலார் அந்தக் கிழவியின் வீட்டிற்குச் சென்றார். நபிகளாரின் வருகையைக் கண்டு கிழவியின் கண்கள் விரிந்தன.

ஆதரவற்றுப் படுத்திருந்த கிழவியின் உடல் நலத்தை அண்ணலார் அன்புடன் விசாரித்தார். பின்னர் "கவலைப்படாதே அம்மா, ஆண்டவன் உனக்கு நலமளிப்பான். உனக்குத் தேவையான உதவிகளை நான் செய்கிறேன்'' என்று கனிவுடன் கூறிக் கிழவியின் நலத்திற்காக ஆண்டவனிடம் இரு கரமேந்தி வேண்டினார்.

துன்புறுத்தியோரையும் பொறுமையோடு சகித்துக் கொண்டு துணைபுரிய வந்த பெருமானின் பெருந்தன்மை கிழவியின் நெஞ்சத்தை மாற்றியது. உடல் நலம் பெற்றதும் அண்ணலாரிடம் ஓடோடி வந்து தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டாள்.

- க. கண்ணி, மீட்டூர், சேலம் மாவட்டம்.

சிறுவனின் சிலேடை!


சிலேடைக் கவிதைகள் பாடுவதில் பேராற்றல் பெற்றவர் காளமேகப் புலவர். அவர் ஒரு சமயம் நண்பகல் நேரத்தில் பசியோடு உணவு விடுதியைத் தேடி அலைந்தார். சாலையோரத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். புலவர் அவர்களிடம் சென்று, "தம்பிகளா... சோறு எங்கே விக்கும்?'' என்று கேட்டார்.


அவர்களில் ஒருவன், ''சோறு தொண்டையிலே விக்கும்!" என்றான்.

சிறுவனின் கிண்டலைக் கேட்டு புலவருக்குக் கோபம் வந்தாலும், அவனது சிலேடையை ரசித்துச் சிரித்தார்.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

பூமியைக் காப்போம்;





சூரியன் என்ற அரசனை மையமாகச் சுற்றி வரும் ஒன்பது கோள்களில் சூப்பர் ஸ்டார் எது தெரியுமா? நமது பூமி தான். ஏனென்றால் பூமியில்தான் இது வரை உயிரினங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. சூரியனிலிருந்து மூன்றாவது கோளான பூமியில் தான் தட்பவெப்ப நிலை உயிர் வாழ்தலுக்கு உகந்ததாக இருந்து வருகிறது.


நமது பூமி பிறந்து 460 கோடி ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் 550 கோடி ஆண்டுகள் வரை பூமி சுழன்று கொண்டிருக்கும். பூமி பிறக்கும் போதே உயிரினங்கள் தோன்றிவிடவில்லை. பூமி நெருப்புப் பிழம்பாகி, குளிர்ந்து, இறுகி காற்று, நீரால் உயிரினங்கள் தோன்ற பல கோடி ஆண்டுகள் ஆயின.

இன்று சர்வ வல்லமை படைத்த மனிதன் தோன்றுவதற்குப் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னரே கோடிக்கணக்கான உயிரினங்கள் தோன்றி விட்டன. மனிதன் தோன்றி வெறும் 11½ கோடி ஆண்டுகள் தான் ஆகின்றன. எல்லா உயிரினங்களுக்கும் ஜூனியரான மனிதன் இன்று தன் ஆளுமையை எல்லா விதங்களிலும் வெளிப்படுத்தி வருகிறான்.

பரிணாம வளர்ச்சியடைந்த மனிதன் நாகரீகத்திலும் அறிவியல் முன்னேற்றத்திலும் உயர்ந்த இடத்தைப் பிடிக்கப் பிடிக்க ஒரு புறம் பூமி மாசுபடுவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் காடுகளில் சுற்றித் திரிந்த மனிதன் இன்று காட்டைத் தன் தேவைக்கும் அதிகமாக அழித்து வருகிறான். காடுகளில் உள்ள பெரும்பான்மையான மரங்கள் உலகெங்கும் அழிக்கப்பட்டு வருகின்றன. விறகுக்காக மரம் வெட்டுவதைக் காட்டிலும் தொழிற்சாலைகளுக்காகத் தான் மரம் அதிகம் வெட்டப்படுகிறது.

மரங்களை வெட்டுவதால் மழை குறைகிறது. அதுமட்டுமின்றி மண் அரிப்பும் ஏற்படுகிறது. பூமியில் உள்ள மண் தாவரங்களின் வேர்கள் மூலம் கெட்டியாகப் பாதுகாக்கப்படுகிறது. மரம் வெட்டுவதால் மண் அரிப்பைத் தடுக்க வழியின்றிப் போய் விடுகிறது.



இயற்கையாக அமைந்துள்ள நீர் நிலைகளான கடல், ஆறு, குளம், குட்டைகளில் ஆலைக் கழிவுகள், மனிதக் கழிவுகள், ரசாயனக் கழிவுகள் போன்றவை கலக்கப்பட்டு அதைப் பயன்படுத்தும் மனிதனிலிருந்து பிராணிகள், தாவரங்கள் மற்றும் பல உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன.

நிலம், நீரை அடுத்து காற்றையும் மாசுபடுத்தி வருகிறான் மனிதன். மரங்களை வெட்டுவதால் நமக்கு ஆக்ஸிஜன் அளவு குறைந்து போகிறது. வாகனப் புகை, தொழிற்சாலை புகை, அணுகுண்டு வீசுவதால் ஏற்படும் பாதிப்புகளால் காற்றும் மாசு அடைந்து வருகிறது.

பூமியைக் குறிப்பிட்ட அளவிற்கு ஓசோன் படலம் சுற்றியுள்ளது. இந்த ஓசோன் படலம் சூரியனிலிருந்து வெளிவரும் அபாயகரமான புற ஊதாக் கதிர்களைப் பூமிக்குள் புக விடாமல் தடுத்து விடுகிறது. ஆனால் பூமியில் உபயோகப்படுத்தும் மருந்து, குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்து வெளிவரும் குளோரோ ஃபுளோரோ கார்பன், விவசாயத்தால் நிலத்திலிருந்து வெளிவரும் மீத்தேன், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சல்பர் டை ஆக்ஸைடு வாயுக்களால் ஓசோன் படலத்திலேயே ஓட்டை விழுந்து விட்டது. ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்ததால் பூமியின் வெப்ப நிலை உயர்கிறது. பூமியில் களைச் செடிகள் அதிகம் முளைக்கின்றன. மனிதர்களுக்குத் தோல் புற்று நோய் ஏற்படுகிறது. அண்டார்டிகா பகுதியில் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்ததால் அந்தப் பகுதியில் வெப்பம் அதிகமாகி பனிகட்டிகள் உருக ஆரம்பிக்கின்றன. இப்படி பனிக்கட்டிகள் உருகுவதால் கடலில் நீர் அதிகமாகச்

மனிதன் தோன்றி வெறும் 11½ கோடி ஆண்டுகள் தான் ஆகின்றன.

பூமி நம்மைக் காக்கும்!



சேர்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு 5 செ.மீ. அளவு வருடந்தோறும் கடல் நீர் மட்டம் உயர்ந்தது. தற்போதோ ஆண்டுக்கு 25 செ.மீ. அளவாக உயர்ந்துவிட்டது.

நீர் மாசு, காற்று மாசு, நில மாசுகளைக் கட்டுப்படுத்தி மரங்களையும் காடுகளையும் அதிகரித்தால் பூமியின் வாழ்நாள் கூடும்.

இவ்வாறு தண்ணீர் அதிகமாகிக் கொண்டே போனால் பூமியின் ஆயுள் 550 கோடி ஆண்டுகள் வரைக்கும் நீடிக்காது. 100 கோடி ஆண்டுகளிலேயே தண்ணீருக்குள் நிலப்பரப்பு முழுவதும் மூழ்கி விடும் அபாயம் ஏற்பட்டுவிடும்.

இதுவரை 22 1/2 கோடி ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அகன்ற இலைக் காடுகள் அழிக்கப்பட்டுப் பாலைவனங்களாகிவிட்டன. மரத்தை வைத்துச் செய்யப்படும் பொருள்களை இரும்பு போன்ற வேறு உலோகங்களால் செய்து பயன்படுத்தலாம். குளிர் சாதனங்களில் குளோரோ ஃபுளோரோ கார்பனுக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. மீத்தேன் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சல்பர் டை ஆக்ஸைட் ஆகியவற்றின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டும். தற்போது இந்தியாவில் அரசு அலுவலகங்கள், நிறுவனங்களில் நாற்காலி, மேஜை, ஜன்னல், கதவு போன்றவற்றுக்கு மரம் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அலுமினியம் அல்லது எஃகு பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. பிளாஸ்டிக் பொருட்கள் எவ்வளவு ஆண்டுகளானாலும் அழியாது. எனவே பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக வேறு பொருளைப் பயன்படுத்தலாம்.

நீர் மாசு, காற்று மாசு, நில மாசுகளைக் கட்டுப்படுத்தி மரங்களையும் காடுகளையும் அதிகரித்தால் பூமியின் வாழ்நாள் கூடும்.

இந்தப் பூமி நமக்கு மட்டும் சொந்தமில்லை. தாவரங்கள், பிராணிகள், பறவைகள், மீன்கள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் என அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. இதில் மனிதன் மட்டுமே இயற்கைக்கு மாறாக மாசு படுத்துகிறான். இது எந்த விதத்தில் நியாயம்? பூமியை நாம் பாதுகாத்தால் பூமி நம்மைப் பாதுகாக்கும்.

ஏப்ரல் 22 புவி பாதுகாப்பு தினம். நமக்குக் கிடைத்த இந்த அழகான பூமியை நமது சந்ததிகளுக்குப் பத்திரமாக விட்டுச் செல்ல வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

அட்டையில் : **ராகவி**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

வந்த வழி!

துறவி ஒருவரிடம் பெரும் செல்வந்தர் பேசிக் கொண்டிருந்தார். அப்போது செல்வந்தர் கேட்டார்: "சுவாமி... நேற்று உபன்யாசத்தில் சொன்னீர்களே, 'நேர்மையான வழியில் செல்வம் ஈட்டினால் நற்பலன் கிடைக்கும். தவறான வழியில் வரும் செல்வம் கேடு விளைவிக்கும் என்று. அது எப்படி? நானே ஒரு வியாபாரி. உங்களுக்குத் தெரியாததல்ல. பதுக்கல், வரி ஏய்ப்பு என்று பல கெட்ட வழிகளில் பணத்தைக் குவித்துள்ளேன். எப்படி வந்தாலும் செல்வம், செல்வந்தானே. அது எப்படி கேடு விளைவிக்கும்?" என்றார்.

துறவி பேசவில்லை. அருகில் நின்ற சீடனைப் பார்த்தார். குறிப்பறிந்து உள்ளே சென்ற சீடன், சிறிது நேரத்தில் ஒரு தம்ளரில் பாலைக் கொண்டு வந்து செல்வந்தரிடம் கொடுத்தான். பாலைக் குடித்த செல்வந்தர் முகத்தைச் சுளித்தார்.

"சுவாமி பாலில் ஒரே மண்ணெண்ணெய் வாடை..." என்று அருவெறுப்புடன் சொன்னார்.

துறவி சீடனைப் பார்க்க... சீடன் சொன்னான். :

"ஆம் ஐயா... அடுப்பில் தணல் இல்லை. அதனால் மண்ணெண்ணெய் விளக்கில் சூடாக்கிக் கொண்டு வந்தேன்" என்றான்.

"அதுதான் மண்ணெண்ணெய் நாற்றம்..." என்றார் செல்வந்தர்.

துறவி சிரித்தபடி சொன்னார் :

"பார்த்தீர்களா அடுப்பில் இருப்பதும் நெருப்புதான். மண்ணெண்ணெய் விளக்கில் இருப்பதும் நெருப்புதான். ஆனால் விளக்கில் சூடாக்கிய பால் நாற்றமடிக்கிறது அல்லவா... அது போலத்தான் செல்வமும். கெட்ட வழியில் வந்தால் கேடு விளைவிக்கும்" என்றார்.


செல்வந்தர் புரிந்து கொண்டு தலைகுனிந்தார்.


– ஜி. பாபு, கும்பகோணம்.



உலக வரைபடம்

கதை: தஞ்சை தாமு   படம்: சேகர்





பாலுவின் முறை வந்தது.
டீச்சர் நான் ஒண்ணு சேர்த்துட்டேன்.
வெரிகுட்! எப்படி பாலு? உனக்கு உலக வரைபடம் அத்துப்படியா?
இல்லைங்க டீச்சர். பின்னால மனிதனின் படம் இருந்தது. மனிதனின் கை, கால், தலை ஒண்ணு சேர்த்துத் திருப்பினால் உலக வரைபடம் கிடைத்து விட்டது.
சபாஷ்! இதிலிருந்து என்ன தெரியுது?
மனிதன் ஒழுங்கா இருந்தால் உலகமும் ஒழுங்கா இருக்கும் டீச்சர்!
? !







வனவிலங்குகளைக் காப்போம்!

'வனவிலங்குச் செல்வம்' என்பது இயற்கையின் கொடைகளில் இன்றியமையாத செல்வத்துள் ஒன்றாகும்.

ஆனால் இன்றோ, இவ் விலங்குகள் சிறிது சிறிதாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இந்த இழப்பு, இயற்கையை நேசிப்பவர்களிடமும், சுற்றுச் சூழல் ஆர்வலர்களிடமும் பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

வன விலங்குகள் அவற்றின் தோல், கொம்பு, தந்தம், நகம் மற்றும் பல்வேறு உறுப்புகளுக்காக மனிதனால் வேட்டையாடப்பட்டு கொன்று குவிக்கப்படுகின்றன.

பெரும்பாலான நாடுகளில் இவ் வன விலங்குகளைப் பாதுகாக்க மிகக் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இக் குற்றங்களுக்கு எதிரான தண்டனைகளும் கடுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. வன விலங்குகளை வேட்டையாடுவதும் அமைதியின்றியும், காரணமின்றியும் வனங்களுக்குள் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய வனவிலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்க பல நாடுகளில், அவ் விலங்குகள் வாழும் வனப்பகுதி முழுவதுமே 'ரிசர்வ்ஸ்' எனப்படும் 'பாதுகாக்கப்பட்ட' வன விலங்கு புகலிடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

சில வன விலங்கு காப்பிடங்கள் ஒரு மிகப் பெரிய பரப்பளவில் கூட உள்ளன. இதன்மூலம் பெரும்பான்மையான வன விலங்குகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, அரிய வகை விலங்குகள் அதிகமாக உள்ள வனப்பகுதிகள், அவ்வகை





விலங்குகளின் சிறப்புப் புகலிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் குஜராத்தில் உள்ள 'கிர்' வனப்பகுதி சிங்கங்களுக்கான சிறப்புப் புகலிடமாக உள்ளது.

மனிதனுடைய தாக்குதல் மட்டுமன்றி அவன் உபயோகப்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் போன்றவற்றினால் இயற்கைச் சூழ்நிலைக்கு ஆபத்து ஏற்பட்டு இவ்வன விலங்குகளுக்குப் பெரும் அழிவைத் தேடித் தருகின்றன.

சில தன்னார்வத் தொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகளினால் பெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு இவ்வன விலங்குகளின் அழிவு தடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நம் அரிய வன விலங்குகளைப் பாதுகாக்க நாம் தவறினோமானால், இன்று உயிருடன் பார்க்கும் இவ்விலங்குகளை, நாளை 'மியூசியத்தில்' மட்டுமே உயிரற்று காணக்கூடிய அவலத்திற்கு ஆளாவோம் என்பது மட்டும் உண்மை. இந்த நிலைமை வேண்டுமா?

— சங்கர கிருஷ்ணன்





கல்வித் துறையில் மூளைச் சலவை!

ஏப்ரல் மாதம். பத்தாம் வகுப்பு பரீட்சைகள் முடிந்து விடுமுறை தொடங்கி இருக்கும். இந்தக் காலகட்டத்தில்தான் தம்பி தங்கைகளுக்கு வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பம். தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய கட்டாய சூழலில் மாணவ மாணவியர்.

'பிளஸ் டூவில் எந்த குருப் எடுப்பது? நாம் விரும்பும் பாடங்களைப் படிக்க முடியுமா? அல்லது தலைமை ஆசிரியர் கொடுக்கும் குருப்பைத்தான்



ஏற்றாக வேண்டுமா? வேறு கல்விக் கூடத்துக்கு மாறலாம் என்றால் இடம் கிடைக்குமா?' பிரச்னைகள், குழப்பங்கள்.

பெற்றோர்களோ, பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பேசுவதாகக் கூறுவார்கள். 'இதைப்படி, இதில்தான் வேலை வாய்ப்பு; அதைப்படி, அதில்தான் நல்ல சம்பளம்' என்று அறிவுரைகளுக்குப் பஞ்சமே இருக்காது.

இத்தனைக்கும் மத்தியில் உங்கள் சொந்த விருப்பு வெறுப்புகள்– அதை யாராவது யோசிக்கிறார்களோ? 'பிடிக்காது என்று உண்டா? படித்தால் பிடித்துப் போகும்; முதலில் கொஞ்சம் சிரமம், போகப்போக சரியாகிவிடும்' என்று ஞானோபதேசங்கள்!

உயர் கல்வியை உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப நீங்கள் இழுக்க முயற்சி செய்ய, மற்றவர்கள் தங்கள் இஷ்டத்துக்கு உங்களை ஈர்க்கப் பாடுபட, 'டக் ஆஃப் வார்'தான்!


முன்னேறிய மேலை நாடுகளில் இது போன்று கயிறு இழுக்கும் போட்டி கல்வித் துறையில் கிடையாது. இளம் உள்ளங்களின் ஆர்வம், விருப்பம், ஈடுபாடு எல்லாம் எந்தத் திசையில் செல்கிறது என்று தனித்தனியே எடை போட்டுப் பார்க்கப்படுகிறது. மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்துப் பேசுகிறார்கள். அவர்களுடைய ஆற்றலும் ஆர்வமும் எந்தத் திசையில் பிரகாசிக்கிறது என்பதை இரண்டு மூன்று ஆண்டுகளாகவே கணித்து வைத்திருப்பார்கள். அவர்கள் ஆசைப்படுகிற துறையில் அவர்களை ஊக்குவித்து வழிகாட்டுகிறார்கள். அங்கே 'டக் ஆஃப் வார்' விளையாட்டில் மட்டும்தான்; கல்வித் துறையில் கிடையாது!

நம் நாட்டிலும் இத்தகைய சூழ்நிலை உருவாக வேண்டும். சில காலம் முன்பு இங்கே இன்ஜினியர் அல்லது டாக்டர் படிப்புக்குத்தான் 'மவுசு' இருந்தது. அப்புறம் பி.காம்., பி.ஏ. என்று பரபரத்தார்கள். இப்போதோ 'கம்ப்யூட்டர், கம்ப்யூட்டர்' என்று துடிக்கிறார்கள். பிள்ளைகள் எதை விரும்புகிறார்கள் என்பது குறித்து யாரும் கவலைப்படுவதில்லை! 'உன் எதிர்காலத்துக்குத்தானே சொல்கிறோம்; கம்ப்யூட்டர் நிபுணர் என்றால் உடனே வேலை வாய்ப்பு; பல்லாயிரக் கணக்கில் சம்பளம்' என்று மூளைச் சலவையே நடக்கிறது!

கம்ப்யூட்டர் துறையில் மெய்யாலும் ஈடுபாடு இருந்தால் நீங்கள் கொடிகட்டிப் பறப்பதில் மகிழ்ச்சியே. ஆனால் ஆட்டு மந்தை குணம் வேண்டாம். சிந்தியுங்கள். உங்கள் உள் மனத்தின் ஆசை என்ன? அதற்கு மதிப்புக் கொடுங்கள்!


– ஆசிரியர்

Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-





எழுத்துகளை
வரிசைப்படுத்தி
பெயரைக்
கண்டுபிடியுங்கள்!

விடை: முல்லைக்குத்
தேர்ந்த பாரி வள்ளல்



வழி
கண்டுபிடியுங்கள்





ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!

விடை: 1. முண்டாசு 2. நாய் நாக்கு, 3.டீ.வி பட்டன்,
4. சிறுவனின் முடி, 5. ஈஸி சேர்

பிருந்தாவனம்

''என்னம்மா எனக்கு இவ்வளவு கொஞ்சமா பலகாரம் தர்றே...?''

''இதெல்லாம் உனக்கில்லை. உன் தம்பிக்கு.''

''என்னது! இத்தனையும் அவனுக்கேவா?''

— சத்யா முருகவேல்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

